Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 161

வெள்ளிக்கிழமை
06 மே 2022

சித்திரை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

## எரிபொருளுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, மே 6
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றுமுதல் வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகத்துக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
மோட்டார் சைக்கிள்களுக்கு 2 ஆயிரம் ரூபாவுக்குள்ளும், முச்சக்கர வண்டிகளுக்கு 3 ஆயிரம் ரூபாவுக்குள்ளும், கார்கள், 12 ➤

## தனியார் பஸ் சேவைகள் தொங்குபறி நிலையில்!

இன்று முதல் எதிர்வரும் 7 நாள்களுக்கு பஸ் சேவைகள் இடம்பெறுமா என்பது நிச்சயமற்றதாகவே உள்ளது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். 15 ➤

## யாழ். வர்த்தகர்களுக்கு துண்டுப்பிரசுரங்கள்!

யாழ்ப்பாணம், மே 6
இன்று நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மக்களை வதைக்கும் கொலைக்கார அரசாங்கத்தை விரட்டியடிக்கும் மக்கள் 12 ➤

# இன்று ஹர்த்தால் நாடு முடங்கும்!

★ 2000 தொழிற்சங்கங்கள் இணைவு
★ போக்குவரத்துக்களும் ஸ்தம்பிக்கும்
★ வர்த்தகர்களும் ஆதரவு

**கொழும்பு, மே 6**
**இன்று முன்னெடுக்கப்படவுள்ள 24 மணிநேர ஹர்த்தாலுக்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆதரவு வழங்கியுள்ள நிலையில் நாடு இன்று முற்றாக ஸ்தம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.** 15 ➤



## மாணவர்களை அடக்க முயற்சி நாடாளுமன்று அருகே பதற்றம்

கொழும்பு, மே 6
நாடாளுமன்றத்துக்கு அருகே நேற்று மாலை அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். அதனால் அங்கு பதற்ற நிலைமை 12 ➤

## அரசைக் காப்பாற்றும் சுயாதீன அணி!

கொழும்பு, மே 6
பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து விலகிய ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மீண்டும் பிரதிசபாநாயகர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அது 15 ➤

## "டபிள் கேம்" ஆடுவோரது முகத்திரைகள் கிழிந்தன!

### சபையில் சஜித் சீற்றம்

கொழும்பு, மே 6
அரசியலில் "டபிள் கேம்" ஆடுபவர்களின் முகத்திரை கிழிந்துவிட்டது. ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவும் அரசியல் கைக்கூலியாக மாறிவிட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 12 ➤

## போக்குவரத்துச் சபை ஹர்த்தாலுக்கு ஆதரவு

கொழும்பு, மே 6
இன்று முன்னெடுக்கப்படவுள்ள நாடளாவிய ரீதியிலான ஹர்த்தாலுக்கு போக்குவரத்துச் சபை ஊழியர் 15 ➤

## எதிரணிகள் காட்டிக்கொடுப்பாம் கதைவிடுகிறார் சியம்பலாப்பிட்டிய

கொழும்பு, மே 6
எதிரணிகளின் பலத்தை காண்பிக்கவே பிரதி சபாநாயகர் பதவிக்கு மீண்டும் போட்டியிட்டேன். ஆனால் அந்த வாய்ப்பை எதிரணியினர் தவறவிட்டு மக்கள் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டனர் என்று பிரதி சபாநாய 15 ➤

## குத்தகைக்கு கச்சதீவு இந்தியா திட்டம்!

சென்னை, மே 6
இலங்கையிடம் இருந்து கச்சத்தீவை 99 ஆண்டுகள் 15 ➤

## வாக்குச் சீட்டைக் காட்டி டோஸ் வாங்கிய சஜித்

கொழும்பு, மே 6
இரகசிய வாக்கெடுப்பின் போது, வாக்குச்சீட்டை சபையில் காட்சிப்படுத்தியதால் எதிர்க்கட்சித் தலைவர் மீது, சபாநாயகர் கடும் சீற்றத்தை வெளிப்படுத்தினார்.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் கூடியபோது, பிரதி சபாநாயகருக்கான தேர்வு இடம் 15 ➤

பிரதி சபாநாயகராக

# சியம்பலாப்பிட்டிய மீண்டும் பதவியில்!

### ஆதரவாக 148 வாக்குகள், எதிராக 65 வாக்குகள்
### சுயாதீன எம்.பிக்கள் ஆளும் கட்சி 'டீல்' அம்பலம்

கொழும்பு, மே 6
புதிய பிரதி சபாநாயகராக மீண்டும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
நாடாளுமன்றில் நேற்று பிரதி சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பு [illegible] யாப்பா அபேவர்தன முன்னிலையில் இடம்பெற்றது. 15 ➤

## உயிருக்கு உலை வைக்கும் கைபேசி விளையாட்டுகள்

### யாழில் இரண்டாவது மரணம்

யாழ்ப்பாணம், மே 6
யாழ்ப்பாணம், தாவடிப் பகுதியில் இளம் குடும்பத் தலைவர் ஒருவர் திடீரென தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு தழுவிய ஹர்த்தாலுக்கு 2,000 தொழிற்சங்கங்கள் ஆதரவு

கொழும்பு,மே 6

**சுகாதாரம், போக்குவரத்து, ரயில், மின்சாரம் மற்றும் கல்வித்துறை உள்ளிட்ட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ள, நாடு தழுவிய ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன என்று தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் தெரிவித்துள்ளது.**

இன்று ஆர்ப்பாட்டம் மற்றும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக ஆசிரியர் - அதிபர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம், மேலும் பல தொழிற்சங்கங்களுடன் இணைந்து ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக ராஜகிரியச் சந்தியில் போராட்டம் இடம்பெறும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கும் வகையில் 24 மணித்தியாலங்கள் ரயில் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் எஸ்.பி.விதானகே தெரிவித்தார்.

40 க்கும் மேற்பட்ட ரயில்வே தொழிற்சங்கங்கள் இந்த வேலைநிறுத்தத்தில் கைகோர்க்கும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள், ரயில்வே தொழிற்சங்கங்களுக்கு ஆதரவு அளிக்கும்.

வேலைநிறுத்தத்தின்போது, நாடு முழுவதும் ரயில் சேவைகள் இடம்பெறாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு இலவச போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (க-இ)

## பிரதி சபாநாயகர் தெரிவில் சு.க.வுக்கு பெரமுன ஆதரவு

### நாடகம் அம்பலமானது என கூட்டமைப்பு விளாசல்!

கொழும்பு, மே 6

பிரதி சபாநாயகர் தெரிவு அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவிட்டதாக கூறியவர்களின் நாடகத்தை அம்பலப்படுத்தியுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட ருவிற்றர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"பிரதி சபாநாயகர் பதவிக்கு சுதந்திரக் கட்சியினால் முன்மொழியப்பட்டுள்ள ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு ஆதரவு வழங்குவதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய சில தரப்புகள் அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டதாக அண்மைய நாள்களில் அரங்கேற்றிய நாடகத்தை இது அம்பலப்படுத்தியுள்ளது"- என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## அரசாங்கத்துக்கு எதிராக மருத்துவர்களும் களத்தில்

கொழும்பு,மே 6

அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் இன்று முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு மருத்துவ நிபுணர்கள் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

சங்கத்தின் செயற்குழுவின் முடிவுக்கமைவாக, பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் ஹர்த்தாலில் ஈடுபட சங்கம் தீர்மானித்துள்ளது.

இன்று அரச மருத்துவமனைகள் வழமைபோன்று செயற்படுவதற்கும், அனைத்து அவசர சிகிச்சைகளையும் மேற்கொள்ளவும், மதிய உணவு நேரத்தில் ஏனைய மருத்துவமனை சுகாதார ஊழியர்களுடன் இணைந்து ஹர்த்தாலில் ஈடுபடவும் சங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன் தனியார் துறையில் அவசர மருத்துவ சேவைகளை மட்டும் மேற்கொள்ளவும், ஏனைய சேவைகளைத் தவிர்க்கவும் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனை, மகப்பேறு மற்றும் சிறுவர் மருத்துவமனைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து சுகாதார ஊழியர்களும் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனரென்று இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாடு, சம்பள நிலுவை உள்ளிட்ட பல பாரதூரமான பிரச்சினைகள் சுகாதார சேவையில் ஏற்பட்டுள்ளன.

எனினும் அரசாங்கம் மௌனமாக இருக்கின்றது. தற்போதைய அரசாங்கமும், ஜனாதிபதியும் பதவி விலகவேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (க-இ)



## தனியார் பேருந்துகள் சேவைப்புறக்கணிப்பு

### ஹர்த்தாலுக்கும் ஆதரவு

கொழும்பு,மே 6

தேவையான எரிபொருள் விநியோகிக்கப்படாமையால், தனியார் பேருந்துகள் நேற்று நள்ளிரவு முதல் சேவைப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

அத்துடன் இன்று அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் நடவடிக்கைக்கும் முழுமையான ஆதரவு வழங்குவோம் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (க-இ)

## தொழிற்சங்க நடவடிக்கையில்லை ஆனால் ஹர்த்தாலுக்கு ஆதரவு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 6

நாடு முழுவதும் இன்று முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆதரவு வழங்குகின்றது.

ஆனால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடாது. நண்பகல் 12 மணி தொடக்கம் 2 மணி வரையில் ஒவ்வொரு மருத்துவமனை முன்பாகவும் போராட்டங்களில் ஈடுபடும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக்குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார். 'நாட்டு மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ள நிலையில் மக்களுக்கு மேலும் துன்பங்களைக் கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. இன்றைய ஹர்த்தாலுக்கு எமது சங்கம் ஆதரவைத் தெரிவித்தாலும், எமது மருத்துவர்கள் பணிகளை மேற்கொள்வார்கள். மருத்துவமனை முன்பாக நண்பகல் 12 மணியிலிருந்து 2 மணி வரையில் போராட்டங்களை மேற்கொள்வதுடன், கறுப்புப் பட்டிகளை அணிந்து கடமைகளில் ஈடுபடுவார்கள். அத்துடன் நாட்டு நிலைமைகளை விளக்கும் வகையில் துண்டறிக்கைகளும் விநியோகிக்கப்படும்' என்று அவர் குறிப்பிட்டார். (ஓ-5)

## போராட்டத்தில் ஈடுபட்டோரை கைதுசெய்தோர் விசாரணைக்கு

கொழும்பு, மே 6

போராட்டக்காரர்களை கைதுசெய்த பொலிஸ் அதிகாரிகளை விசாரணைக்கு அழைக்கவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 பேர் கைது செய்யப்பட்டனர். இதையடுத்தே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தோரை விசாரணைக்கு அழைக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## நாடாளுமன்ற வீதிகள் நேற்றும் இன்றும் பூட்டு

கொழும்பு, மே 6

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வீதிகள் நேற்றையதினம் பூட்டப்பட்டிருந்தன. நாடாளுமன்ற அமர்வை தடையின்றி முன்னெடுப்பதற்காகவே மேற்படி வீதிகள் பூட்டப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தொடர்ச்சியாக இன்றும் அந்த வீதிகள் பூட்டப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தியத்த உயன சந்தியில் (பொல்துவ சந்தி) இருந்து ஜயந்திபுர சந்தி வரையும், ஜயந்திபுர சந்தியில் இருந்து கியன்ஹாம் சந்தி (டென்சில் கொப்பேகடுவ வீதி) வரையும் வீதிகள் பூட்டப்பட்டிருக்கும். (ம)



## ஹர்த்தாலுக்கு ஆதரவாக

# வடக்குப் பட்டதாரிகள் இன்று சுகவீன விடுமுறை

யாழ்ப்பாணம்,மே 6

பொதுச் சேவையிலுள்ள அனைத்து அலுவலர்களாலும் இன்று மேற்கொள்ளப்படும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவாக, வடக்கு மாகாண அரசாங்க சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

கடமைக்கு வருவதற்குத் தேவையான எரிபொருளின்மை, அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், பால் மாவுக்கான தட்டுப்பாடு, மருந்துகளின்மை, சம்பள அதிகரிப்பின்மை ஆகிய கோரிக்கைகள் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியில் இன்று வெள்ளிக்கிழமை ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு ஆதரவு தெரிவித்து வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களாகிய நாமும் சுகவீன விடுப்புடன் பேராதரவை வழங்குவோம் என்று சங்கத்தின் தலைவர் கே.எஸ். மயூரன் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை மக்களுக்கு உதவுவதற்கு தமிழகப் பொலிஸாருக்கும் அழைப்பு

## தமிழக டி.ஜி.பியின் ஒருநாள் சம்பளம் நன்கொடை

சென்னை,மே 6

**இலங்கை மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்கு தமிழகப் பொலிஸாரும் தம்மால் முடிந்த உதவிகளை வழங்கவேண்டும் என்று தமிழகப் பொலிஸ் தலைமை இயக்குநர் சி.சைலேந்திரபாபு வேண்டுகோள் விடுத்துள்ளார். தனது ஒரு நாள் சம்பளத்தையும் அவர் நன்கொடையாக வழங்கியுள்ளார்.**

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை அடுத்து, தமிழ்நாட்டிலிருந்து உணவு, அத்தியாவசியப் பொருள்கள், உயிர் காக்கும் மருந்துகள் அனுப்பப்படவுள்ளன. இதற்காக ஒன்றிய அரசின் அனுமதியும் கிடைத்துள்ளது. நல்லெண்ணம் கொண்ட அனைவரும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முடியும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார். இந்த நிலையில் தமிழக பொலிஸ் தலைமை இயக்குநர் சி.சைலேந்திரபாபு தனது ஒருநாள் சம்பளத்தை நன்கொடையாக வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார். அத்துடன் அனைத்து மாநகர பொலிஸ் ஆணையர்கள், மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு சுற்றறிக்கையும் அனுப்பியுள்ளார்.

தமிழக முதல்வரின் வேண்டுகோளின்படி, மனிதாபிமான அடிப்படையில் நிவாரண நிதி வழங்க விரும்பும் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸார் என அனைவரும் தங்களால் இயன்ற பண உதவியை மின்னணு பரிவர்த்தனை மூலமாகவோ, காசோலை மூலமாகவோ வழங்கலாம். நன்கொடை வழங்குபவர்களுக்குத் தேவையான அறிவுரைகளைப் பிரிவு அதிகாரிகள் வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (க-இ)



## வை.கோ. ரூ.13.5 லட்சம்

சென்னை,மே 6

இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக ம.தி.மு.க சார்பில் 13.5 லட்சம் ரூபா நிதியை (இந்திய மதிப்பிலானது) அதன் பொதுச்செயலாளர் வைகோ வழங்கியுள்ளார். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வேண்டுகோளை ஏற்று, குறித்தநிதியை முதல்வரிடம் நேரடியாகக் கையளித்தார். இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை அடுத்து, தமிழ்நாட்டிலிருந்து உணவு, அத்தியாவசியப் பொருள்கள், உயிர் காக்கும் மருந்துகள் அனுப்பப்படவுள்ளன.

அதற்காகத் தமிழக முதலமைச்சரால் பல்வேறு தரப்பினரிடமும் உதவிகள் கோரப்பட்டுள்ளன. அதனடிப்படையில் தொடர்ச்சியாக பலர் உதவிகளை வழங்கி வருகின்றனர். (க-இ)

# தமிழக உதவிகளால் மனம் நெகிழ்கின்றது

## நாடாளுமன்றத்தில் மனோ எம்.பி. உணர்ச்சிப்பிரவாகம்

கொழும்பு, மே 6

600 கோடி ரூபா பெறுமதியான உதவிகளை அள்ளித் தந்துள்ள தமிழக அரசின் அறிவிப்புக்களால் எமது மனங்கள் மகிழ்ச்சியில் நெகிழ்கின்றன. கண்கள் குளமாகின்றன. இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் மனோ கணேசன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


இந்தியாவின் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழக முதல்வர் ஸ்டாலின் சட்டமன்றத்தில் சில அறிவிப்புக்களைச் செய்துள்ளார். கடனில் சிக்கித்தவிக்கும் இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்காகவும் அவர் நிவாரண உதவிகளை அறிவித்துள்ளார். அதனை முன்னெடுப்பதற்காக ஒன்றிய அரசின் அனுமதியையும் இலங்கை அரசின் அனுமதியையும் பெற்றுள்ளார். 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா, 137 வகை மருந்துகள் என இலங்கை ரூபாவில் 600 கோடி ரூபா பெறுமதியான நிவாரண உதவிகளை அவர் வழங்குகின்றார்.

அதேவேளை தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது ஒரு மாத சம்பளத்தை இலங்கைக்கு உதவுவதற்காக வழங்குவதாக அறிவித்துள்ளனர். ஆளும் கட்சியான தி.மு.க. ஒருகோடி இந்திய ரூபாவைத் தருவதாக அறிவித்துள்ளது. எதிர்க்கட்சியான அ.தி.மு.க. 50 இலட்சம் ரூபா தருவதாக கூறியுள்ளது. இதனைப் பார்க்கும்போது எங்களுக்கு மனம் நெகிழ்கின்றது. மனம் மகிழ்கின்றது. எமது இந்திய வம்சாவளி மக்கள் சார்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் உதவிக்கான கோரிக்கையை முன்வைத்தோம். நீங்கள் உதவும்போது இன, மத வேறுபாடின்றி அனைவருக்கும் உதவ வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தோம். அதனை அவர் புரிந்துகொண்டார். சட்டமன்றத்தில் அவர் ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் உதவுவது எமது கடமை - என்றார்.

இதனை எமது கண்கள் கலங்க மனங்கள் மகிழ செவிமடுத்தோம். தென்னிலங்கை மக்களினதும் தமிழ் மக்களினதும் உறவுப்பிணைப்பை தமிழக முதல்வர் புரிந்து கொண்டுள்ளார். அவர் ஒரு சமூக நீதிக்காவலர். எதிர்வரும் வருடம் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒழுங்கு செய்துள்ள நிகழ்வுக்குத் தமிழக முதல்வர் ஸ்டாலின் பிரதம விருந்தினராக பங்கேற்க வேண்டுமென அழைப்பு விடுக்கின்றேன். அவரை நேரில் சந்தித்தும் இந்த அழைப்பை நாம் விடுப்போம் - என்றார். (ம-22)

# தாயக மண்ணில் அரங்கேறிய இனப்படுகொலையை மறக்கவும் மாட்டோம்: மன்னிக்கவும் மாட்டோம்

இறுதிக்கட்டப்போரின் போது 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இதே நாளில் உதயனில் வெளியான செய்திகள் நினைவூட்டலுக்காக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் அகழ்ந்த இடத்தில் தொல்பொருள் எச்சங்கள்

## முல்லைத்தீவில் இருவர் கைது



**முல்லைத்தீவு,மே 6**

**மண்ணை அகழ்ந்து தொல்பொருள்களுக்குச் சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மன்னாகண்டல், வசந்தபுரம் கிராமத்தில் நெல் காய விடும் தளத்துக்கு மண் நிரப்பும் நடவடிக்கைக்காக,அருகில் உள்ள வழிபாட்டிடம் ஒன்றின் பகுதிகளை, கனரக இயந்திரம் கொண்டு தோண்டிய போது தொல்பொருள் சிதைவுகள் வெளிவந்துள்ளன.

இதனையடுத்து வசந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் கனரக இயந்திரத்தின் சாரதி ஆகியோர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர், மன்னாகண்டல் கிராம அலுவலர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர், படையினர் ஆகியோர் பிரசன்னமாகினர்.

சம்பவம் தொடர்பில் கிராம அலுவலரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

வசந்தபுரம் கமக்கார அமைப்புக்கான நெல் காயவிடும் தளம், பிரதேச செயலத்துக்குச் சொந்தமான இடம் ஒன்றில் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அருகில் உள்ள பகுதியில் மண் தோண்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை என்று கிராம அலுவலர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

குறித்த நெல் காயவிடும் தளம் அமைந்த பகுதிக்கு அருகில் ஒரு சூழா மரத்தைக் கொண்ட சிறு குன்றுபோன்ற பகுதி காணப்படுகின்றது. மரத்தின் கீழ் கற்களை வைத்து நீண்டகாலமாக வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (க-19)

## ஒரு பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தனது கிளைகள் ஊடாக நுகர்வோருக்கு பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெயை வழங்கி வருகின்றது.

இதற்கமைய ஒரு பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் என்ற ரீதியில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது. (ஒ-14,17)

## யாழில் வழமைக்குத் திரும்பியது மண்ணெண்ணெய் விநியோகம்




யாழ்ப்பாணம், மே 6

யாழ்.குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் மண்ணெண்ணெய் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது என பெற்றோலிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் கடந்த 3 நாள்களில் சுழற்சி முறையில் 6 ஆயிரத்து 600 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த மண்ணெண்ணெய் நுகர்வோருக்குப் பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்படுகிறது. அத்துடன் மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.

மேலும் எரிபொருள் நிலையங்களுக்கு தொடர்ச்சியாக மண்ணெண்ணெய் வழங்க, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி



யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணத்தில் செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தற்போதைய கடும் வறட்சி வெப்பத்தால் செவ்விளநீரின் விற்பனை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் யாழில் செவ்விளநீருக்கு பற்றாக்குறை ஏற்பட்டதால் வியாபாரிகள் தென்மாகாணத்திலிருந்து பெற்று விற்பனை செய்கின்றனர். செவ்விளநீர் ஒன்று 125 ரூபா முதல் 150 ரூபா வரையில் விற்கப்படுகின்றத. (ஒ-14,17)

### வல்லை மதுபான விடுதிக்கொலை

## இருவர் பொலிஸ் தடுப்பில்; இருவர் தேடப்படுகின்றனர்


யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி வல்லையிலுள்ள மதுபானவிடுதியில் இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முதன்மைச் சந்தேக நபர்கள் இருவர் தேடப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு விடுதியில் மதுபானம் அருந்திய இரண்டு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் போத்தலினால் குத்தப்பட்டு உயிரிழந்தார். சம்பவத்தில் திக்கம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஞானசேகரம் குணசோதி (வயது - 25) என்பவரே கொல்லப்பட்டவர். இது தொடர்பில் நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் தேடிவந்தனர்.

அவர்களில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சந்தேக நபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். குடத்தனை மேற்கைச் சேர்ந்த மற்றொரு சந்தேக நபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். முதன்மைச் சந்தேக நபர்கள் இருவரும் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்கள் தேடப்பட்டு வருகின்றனர். (ம-26)

## முறைப்பாட்டுக் கடிதம் கசங்கிய நிலையில் மீட்பு

சாவகச்சேரி,மே 6



சாவகச்சேரி மருத்துவமனையில் நிலவும் குறைபாடு தொடர்பாக, முறைப்பாட்டுப் பெட்டியில் போடப்பட்ட கடிதமொன்று, கசங்கிய நிலையில் வீதியில் கண்டெடுக்கப்பட்டது.

தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த ஒருவர், தனது குழந்தையை சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார். அதன்போது விடுதியில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக முறைப்பாட்டை எழுதி அங்குள்ள முறைப்பாட்டுப் பெட்டியில் போட்டுள்ளார்.

குறித்த நபர் வெளியில் சென்று பொருள்கள் வாங்கிக் கொண்டு மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றபோது, முறைப்பாட்டுப் பெட்டியில் போடப்பட்ட கடிதம் கசங்கிய நிலையில் மருத்துவமனை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டது. முறைப்பாட்டுப் பெட்டிக்கு பூட்டு இல்லாத காரணத்தால், கடிதம் போடுவதை அவதானித்த ஒருவர், உயர் அதிகாரியிடம் முறைப்பாடு செல்லாத வகையில் அதனை எடுத்துக் கசக்கி வீசியுள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

யாழ்ப்பாணம், மே 6

வடக்கு மாகாணப் பொதுச் சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இல் கடமையாற்றும் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2018 (I) 2022 ஆம் ஆண்டுக்கானது எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவுள்ளது. இதற்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்து, எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் 0212219939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு வடமாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார். (ஒ-14)

## வீட்டுத்தோட்டம் தொடர்பான செயன்முறை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 6

இயற்கைவழி இயக்கத்தினின் ஏற்பாட்டில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வகையில் வீட்டுத்தோட்டம் அமைப்பது தொடர்பான செயன்முறைக் கலந்துரையாடல், நாளைமாலை 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை கோண்டாவில் எழுதிரள் பணிமனையில் இடம்பெறவுள்ளது. (ஒ-14)

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 6

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை 7 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதான இளையோர் நேற்றுமுன்தினம் இரவு பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் கோத்தா கோ கமவுக்குப் பின்னர் அழைத்துச் செல்லப்பட்டனர். இதன்போது பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. (ஒ-இ)

# ராஜபக்சக்களுடன் இணையோம் எதிர்க்கட்சியில்தான் அமர்வோம்

## சஜித் மீண்டும் அழுத்தம்திருத்தம்

**கொழும்பு, மே 6**

**ராஜபக்சக்கள் அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டியவர்கள். இதனால் அவர்களுடன் இணைந்து செயற்படமாட்டோம். புதிய இடைக்கால அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியில்தான் அமர்வோம் என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.**

தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் மே 6ஆம் திகதி (இன்று) நாடு தழுவிய ஹர்த்தாலை நடத்துகிறது. அது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களை அணுகுவதன் மூலம் தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

இந்த நாட்டில் இனவாதத்தையும், மதவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் ஏற்படுத்தியவர்களுடன் எக்காரணம் கொண்டும் அரசாங்கத்தை அமைக்கவோ அல்லது அதில் பங்குபற்றவோ மாட்டோம். அமைக்கப்படவுள்ள இடைக்கால அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சியாகவே செயற்படுவோம் - என்றார். (ம)

### குருநகர் இளைஞர் கொலை:

# 8 மாதங்களின் பின்னர் சந்தேகநபர்கள் சரண்

யாழ்ப்பாணம்.மே 6

குருநகர் இளைஞர் ஒருவரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று தேடப்பட்ட மூன்று சந்தேகநபர்கள், சுமார் 8 மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் சட்டத்தரணி ஊடாக, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி பட்டப்பகலில் குருநகரில் வீதியில் வைத்து ஜெரன் (வயது-24) என்பவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

சம்பவதினத்தன்று நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த மற்றொரு குழு அவர்கள் மீது சரமாரியாக வாள் வெட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றது. சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபர்களான ரெமி மற்றும் அவரது சகோதர்களை பல இடங்களில் தேடினர். 9 நாள்களின் பின்னர் 6 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்கள் உள்ளிட்ட 14 பேர் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் முதன்மைச் சந்தேகநபர்களான சகோதரர்களில் ஒருவரான ரெமி தலைமறைவாகியிருந்தார். சுமார் 8 மாதங்களின் பின் ரெமி உள்ளிட்ட மூவர் தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் சரணடைந்தனர். சந்தேகநபர்கள் சார்பில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனைநிராகரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, சந்தேகநபர்களை மறுதவணை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (க-26)

# இளைஞர் மீது தாக்குதல் மோட்டார் சைக்கிள் பறிப்பு

முல்லைத்தீவு,மே 6

வயலில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞரைத் தாக்கி, அவரது மோட்டார் சைக்கிள் அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசங்குளம் பெரியவெளி வாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞரை அழைத்த நால்வர், அவருடன் வாக்குவாதப்பட்டு அவரைத் தாக்கியுள்ளனர். பின்னர் அவரது மோட்டார் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் இளைஞரால் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

மாந்தை கிழக்குப் பகுதிகளில் மாலை வேளைகளில் இவ்வாறு சட்ட விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதுடன், வீதிகளில் பயணிப்போர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (க-19)




ஒருமாதிரி பிரதி சபாநாயகர் தெரிவு நடந்து முடிஞ்சுது. இதில பகிடி என்னெண்டால், இவ்வளவுநாளும் பிரதி சபாநாயகரா இருந்திட்டு, இப்ப ராஜினாமா பண்ணின அதே சியம்பலாப்பிட்டிய தான் திரும்ப அதே பதவிக்கு வந்திருக்கிறார். இப்பிடி திரும்பவும் அவர்தான் பிரதி சபாநாயகரா வரப்போறார் எண்டால் எதுக்கு ராஜினாமா செய்தவர்? அப்பிடி ராஜினாமா செய்தால் பிறகேன் அதே பதவிக்கு போட்டி போட்டவர்? பருத்திமூடை பேசாமல் குடோனுக்கையே இருந்திருக்கலாமே.

இந்த பிரதி சபாநாயகர் தெரிவு நடக்க கொஞ்சத்துக்கு முதல், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பு எம்.பிக்கள் எல்லாரையும் தனித்தனிய பார்லிமெண்டில சந்திச்சிருக்கிறார். சுகநலன் விசாரிக்கிற மாதிரி கதைச்சுப் போட்டு, 'சியம்பலாப்பிட்டியவுக்கு சப்போர்ட் பண்ணுங்கோ' எண்டு நைசா சொல்லியிருக்கிறார். அதுக்கு அவர் சொன்னகாரணம் தான் ஆகப்பெரும் பகிடி. சுயாதீன எம்.பிக்கள் சார்பாத்தான் அவர் போட்டி போடப்போறார். இதுக்கு மொட்டுக்காரரும் ஆதரவு. அதால நீங்களும் சப்போர்ட் பண்ணினால், அங்கால ஐக்கிய மக்கள் சக்திக்காரர் தனிச்சுப் போடுவினம். அதுக்குப் பிறகு இந்தச் சுயாதீன எம்.பிக்களை நாங்கள் பிரதான எதிர்க்கட்சியா அங்கீகரிக்கலாம். அதுதான் ஜனநாயகம்.அதுக்கு இது ஒரு முதல் படி, எண்டு புகை அடிச்சிருக்கிறார். ஆனால் கூட்டமைப்புக்காரர் ரணிலின்ர உந்த விளையாட்டுக்கு எடுபடேலை.

ரணில் இப்பிடி சுயாதீனமா இயங்கிறதாச் சொல்லுற எம்.பிக்களை எதிர்க்கட்சியாக்கி அழகு பாக்க நினைக்கிறது பொதுநலத்தோட இல்லை. ஆளுக்கு சஜித்தை எப்பிடியாவது விழுத்தோணும். இப்ப சஜித் எதிர்க்கட்சித்தலைவரா இருக்கிறதை ரணிலால தாங்கிக் கொள்ளேலாமல் கிடக்கு. அதாலதான் சுயாதீனக்காரரை எதிர்க்கட்சியாக்கி, சஜித்தை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில இருந்து விழுத்த ரணில் பிளான் போடுறார். அதுக்குத்தான் கூட்டமைப்புக்காரரை கூட்டுச் சேர்க்க வெளிக்கிட்டது. நல்லாட்சிக்காலக் கூட்டாளியள் எண்ட பழைய பாசத்தில அவை ஓமெண்டு தலையாட்டுவினமெண்டு நினைச்சுத்தான் போல. ஆனால் கூட்டமைப்பு உசாரா நடந்ததால ரணில் வைச்ச வலையில சிக்கேலை.

நல்லாட்சி எண்டத்தான் இன்னொரு எதிர்க்கட்சி விசயம் நினைவுக்கு வருகுது. உண்மையில அப்ப கூட்டமைப்புக்காரர் எதிர்க்கட்சியா இருந்தாலும் ஆளும் கட்சிக்கு சப்போர்ட்டாத்தான் நடந்தவை. மஹிந்த குருப் தான் எதிர்க்கட்சி மாதிரி நடந்தவை. அதோட கூட்டமைப்பை விட மஹிந்த குருப்பில எம்.பிக்களும் கூட. ஆனால் அவை சுதந்திரக் கட்சியில எலெக்சன் கேட்டு எம்.பியானதால எதிர்க்கட்சியில இருக்க முடியேலை. உண்மையில ரணில் ஜனநாயகத்துக்காகத்தான் இப்ப சியம்பலாப்பிட்டியவுக்கும், சுயாதீனக்காரருக்கும் சப்போர்ட் பண்ணுங்கோ எண்டு கூட்டமைப்பிட்ட கேட்டவரெண்டால், ஏன் நல்லாட்சிக் காலத்தில இதே ஜனநாயகத்துக்காக மஹிந்த குருப்பை எதிர்க்கட்சியா அங்கீகரிக்கேலை? எண்ட கேள்வி வருகுதெல்லோ.

அரசியலில இதெல்லாம் சகஜமப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு லீற்றர் மண்ணெண்ணெயில் அரசுக்கு ரூ.226 இழப்பு

## அமைச்சர் சூசகம்!

**கொழும்பு, மே 6**

**ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை 87 ரூபாவுக்கு அரசாங்கம் வழங்கி வருகின்றமையால் ஒவ்வொரு லீற்றருக்கும் 226 ரூபா இழப்பு ஏற்படுகின்றது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மக்களுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை 87 ரூபாவுக்கே அரசாங்கம் வழங்கி வருகின்றது. ஆனால், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்காக 313 ரூபாவை அரசாங்கம் செலவு செய்கின்றது. ஒவ்வொரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கும் 226 ரூபா இழப்பை அரசாங்கம் சந்திக்கின்றது. இதனால் ஏற்படும் இழப்புக்களைக் குறைப்பதற்கும் எதிர்கால எரிபொருள் கொள்வனவுகளுக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் அமைச்சரவையில் வெளிப்படையான விலைச் சூத்திரம் அறிவிக்கப்படும் -என்றார். (ம)

## அதிகளவு வெப்பமான காலநிலை சிறுவர்களுக்கு வைரஸ் காய்ச்சல்



சாவகச்சேரி, மே 6

தற்போது நிலவும் அதிகளவு வெப்பமான காலநிலை காரணமாக, தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறுவர்களிடையே வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது.

எனவே சிறுவர்களுக்கு காய்ச்சல் காணப்படின் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

சிறுவர்களுக்கு காய்ச்சல் ஏற்படின், சாதாரண காய்ச்சல் எனக் கருதி வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்காமல், அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறுமாறும் அறிவித்துள்ளனர்.

அதேவேளை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெருமளவு சிறுவர்கள் சேர்க்கப்படுவதால், விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. (க-9)

## கூ.சங்கப் பணியாளர்களுக்கும் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தமது பணியாளர்களுக்கு வழங்குகின்றன.

ஒரு சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இந்தக் கொடுப்பனவை வழங்கி வருகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கூட்டுறவுப் பணியாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டே கூட்டுறவுச் சங்கங்கள் இந்தக் கொடுப்பனவை பணியாளர்களுக்கு வழங்கி வருகின்றன. அத்துடன் பணியாளர்களுக்கான மாதாந்தச் சம்பளத்துடன் அவர்களின் வாழ்க்கைச் செலவுப்படியையும் சேர்த்து சில கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. (ஒ-14-17)



## மக்களின் பண்பாடுகளை ஆராய மாத்தறை நோக்கி நடைபயணம்

யாழ்ப்பாணம், மே 6

இனம், மதம், மொழி உள்ளிட்ட மக்களின் பண்பாடுகளை ஆராயும் நோக்கில் வெளிநாட்டவர் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தறை நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

நேபாளத்தைச் சேர்ந்த ஐ பஹதூர் (வயது-27) என்பவர்நேற்றுமுன்தினம்காலைமீகஹகியுலாவைச் சென்றடைந்தார். அவரது நடைபயணம் கடந்த மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. நேபாளத்தின் காத்மாண்டுவிலிருந்து, இந்தியாவிலுள்ள பெங்களூருக்கு கால் நடையாகவும், பெங்களூரிலிருந்து கொழும்புக்கு விமானம் மூலமாகவும், பின்னர் ரயில் மற்றும் பேருந்து மூலம் யாழ்ப்பாணமும் வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மாத்தறைக்கு நடந்து சென்று, பல்வேறு மொழி பேசும், பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து, அவர்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளை ஆராய்வதே தனது பயணத்தின் நோக்கம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-இ)

## தேயிலை ஏற்றுமதி

# 23 வருடங்களில் மோசமான வீழ்ச்சி

கொழும்பு, மே 6

இலங்கையின் தேயிலை ஏற்றுமதி கடந்த 23 வருடங்களில் முதற்றடவையாக மிகக் குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்துள்ளது என உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.

உக்ரைன் போர் மற்றும் உரத்தடை ஆகியவையே இதற்கு பிரதான காரணங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதிப் பொருளாக தேயிலையுள்ளது.

தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு முன் ஆண்டுக்கு 1.3 பில்லியன் அமெரிக்க டொலரை தேயிலை ஏற்றுமதி வருமானமாக ஈட்டியது.

இந்த நிலையில் 1948ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின் தற்போது மிக மோசமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அதன்படி 2021ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் உற்பத்தி 18 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மன்னார் மருத்துவமனைக்கு

# மருந்துப்பொருள்களைப் பெற்றுக்கொடுக்க புலம்பெயர்ந்தோர் முன்வரவேண்டும்

### மருத்துவமனை ஊழியர்கள் கோரிக்கை

மன்னார், மே 6

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் தட்டுப்பாடான மருந்துப்பொருள்களை வெளியில் இருந்து பெற்றுக்கொடுப்பதற்கு புலம்பெயர்ந்தோர் அமைப்புக்கள், நிறுவனங்கள், வர்த்தகர்கள் அனைவரும் முன்வரவேண்டுமென்று மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியில் பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள வேளை மருந்துப்பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் அத்தியாவசியமான மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளது.

தட்டுப்பாடாகவுள்ள மருந்துப் பொருள்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மருத்துவமனை ஊழியர்களால் இவ்வாறான கோரிக்கை விடுக்கப்பட்டது. மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மருத்துவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-14-213)

# காற்றாலை அபிவிருத்தித் திட்டத்தால் மன்னார் மக்களுக்கு நன்மைகளில்லை

## அரச சார்பற்ற ஒன்றியம் சுட்டிக்காட்டு

மன்னார் தீவில் உயர் மின்வலு காற்றாலை நிர்மாணிப்பதால் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் இல்லை என்று அரச சார்பற்ற ஒன்றியத்தின் தலைவர் சுதாகர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் தொடர்பில், மன்னார் பிரஜைகள் குழு ஆளுநர் சபையினருடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாம் மக்களுக்கு நன்கு தெளிவூட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம். எம்மில் பலர் நினைக்கின்றனர் வெளியிலிருந்து ஒரு நிறுவனம் இங்கு வந்து இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும்போது எமது மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும், மாவட்டம் அபிவிருத்தி அடையும் என்று. ஆனாலும் நாம் நினைத்தவாறு எந்த வித நன்மைகளும் எமக்குக் கிடைக்கப் பெறவில்லை. இங்குள்ள மக்கள் ஒட்டு மொத்தமாக இவ்வாறான திட்டத்தை எதிர்க்கின்றனர். இந்த விடயத்தில் மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (க-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அறிக்கைகளுக்கு அப்பால்...

இலங்கையில் ஏற்பட்டுள்ள மிகமோசமான பொருளாதார நெருக்கடிகளுக்காக சுமார் 600 கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) பெறுமதியான உதவித்திட்டத்தை அறிவித்திருக்கின்றது தமிழக அரசு. இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக அரிசி, பால்மா, மருந்துப்பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் தமிழகத்தில் இருந்து போர்க்கால அடிப்படையில் இலங்கைக்கு வரவிருக்கின்றன. காலத்தின் தேவையறிந்த இந்த உதவிக்காக தமிழக அரசை எவ்வளவு பாராட்டினும் அது தகும். தொப்புள்கொடி உறவுகள் என்ற ரீதியில் 'ஈழத் தமிழர்களுக்கு' ஒரு பெருமித உணர்வையும் 'தமிழக' அரசின் இந்தத் தாராள மனம் ஏற்படுத்தவே செய்திருக்கின்றது.

அதேநேரம் தமிழகத்தில் ஆட்சியமைத்த காலம்முதல் இன்றுவரை முதல்வர் மு.க.ஸ்டாலினின் நகர்வுகள் சில மிகக் காத்திரமானவையாகவும், தமிழர்களை ஓரணியில் ஒருங்கிணைக்கும் சக்தியாகவும் அமைந்திருக்கின்றன என்றால் அதில் மாற்றுக் கருத்தில்லை. 2009ஆம் ஆண்டின் பின்னர் அதாவது விடுதலைப் புலிகள் ஆயுத அளவில் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் தமிழக-ஈழ அரசியல் உறவென்பது அவ்வளவு ஆழம் மிக்கதாகவும் நேர்த்தியாகவும் இருக்கவில்லை. அந்த உறவானது வெறும் அறிக்கைகளை மையப்படுத்தியதாகத்தான் இருந்துவந்திருக்கின்றது. இந்த சபிக்கப்பட்ட போக்குக்கு, ஒரு காத்திரமான முற்றுப்புள்ளி வைத்து ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான நீண்டதும் நெடியதுமான உறவில் ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஸ்டாலினின் அரசியல் போக்கு நகர்ந்து செல்வது தனித்துத் தெரிகின்றது.

ஆட்சிபீடமேறிய பின்னர் ஸ்டாலின் தனது புதிய அமைச்சரவையில், இதுவரைகாலமும் இருந்துவந்த 'வெளிநாடு வாழ் இந்தியர்கள் நலன்' என்ற துறையை மாற்றி 'வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்' என புதிய துறையை உருவாக்கியிருந்தார். இந்த மாற்றம் ஈழத்தமிழர் நலனை மையப்படுத்தியதுதான் என்பதில் சந்தேகக் கண் தேவையில்லை. அத்துடன் தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அவர்களுக்கான இதர நலத்திட்டங்கள் என்பனவும் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஸ்டாலின் எவ்வளவு அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் இருக்கின்றார் என்பதைத்தான் மெய்ப்பிதம் செய்தன - செய்கின்றன.

தமிழகத்தை ஆளும் தி.மு.க.வுக்கு ஈழத் தமிழர் மனங்களில் கறை படிந்துள்ளமை உண்மைதான். ஆனால், தி.மு.கவின் ஈழத்தமிழர் உறவு வரலாற்றில் 2009ஆம் ஆண்டுப் பக்கங்களை நீக்கிவிட்டு ஆராய்வோமாயின், இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் மிகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது. 13 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, 1989ஆம் ஆண்டு நவம்பரில் ஆட்சிக்கு வந்த கருணாநிதியின் ஆட்சி, 1991ஆம் ஆண்டு ஜனவரியில் கலைக்கப்பட்டதன் பின்னணியில் தி.மு.கவின் ஈழப்போராட்ட ஆதரவே காணப்படுகிறது. ஆதலால் தி.மு.க. மீது அவ்வளவு கசப்புணர்வையோ பகைமையையோ வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவை இங்கில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அங்கிருப்பது தமிழக அரசு தான். மாறாக தி.மு.க., அ.தி.மு.க. என்ற பேச்சையே நாம் 'இராஜதந்திர' ரீதியாகத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இப்படியானதொரு புரிதலின் அடிப்படையில், கடந்த 10 ஆண்டுகளில் ஈழ அரசியல் பிரதிநிதிகள் தமிழகத் தலைமைகளுடன் எவ்வளவு தூரம் நெருக்கமாகச் செயற்பட்டிருக்கின்றனர் என்று கேட்டால் நிச்சயம் அது விசனத்துக்குரியதும் நலினப்பட்டதுமான இராஜதந்திரத்தையே பதிலாகத் தரும். ஈழத்தமிழ் அரசியல் தரப்பு பண்டைய கால 'அறிக்கை' அரசியலுடனேயே முதிர்ச்சியற்று இருப்பது ஈழத்தமிழரின் சாபமாகவே காணப்படுகிறது. தமிழக அரசுடன் ஈழத் தமிழர்கள் உறவை வலுப்படுத்துவது என்பது தவிர்க்க முடியா ஒன்றாகும். தமிழகத்துடனான தொன்றுதொட்ட உறவை மேலும் பலப்படுத்த வரலாறு வழங்கியுள்ள மிகப்பெரும் வாய்ப்பாகவும் திருப்பமாகவும் தமிழகத்தின் 'பொருண்மிய' உதவிக் குவியலைக் கொள்ளலாம்.

தமிழகத்துடனான எமது உறவு இரண்டறக் கலந்ததாகவும் பிரிக்கப்பட முடியாததாகவும் இருக்க வேண்டும். இனியாவது அறிக்கை அரசியலை விடுத்து தமிழகத்துடனான உறவை இறுகப்பற்றிக்கொள்ள , ஈழ அரசியல்வாதிகள் முனைப்போடு இயங்கவேண்டும்.

(ரே-க)

நாளொரு நல்வார்த்தை

"மற்றவர் உள்ளத்தில் உங்களைப் பற்றிய தவறான கணிப்பு உண்டாவதற்கு ஒருபோதும் இடம் அளித்துவிடாதீர்கள்" -மகாகவி பாரதியார்



# அடுத்த அமர்வுக்குள் தீர்வில்லையெனின் நாடாளுமன்றம் கௌரவத்தை இழக்கும்!

## ரணில் வெளிப்படைப் பேச்சு



**கொழும்பு, மே 6**

**"நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு அடுத்த நாடாளுமன்ற அமர்வுக்குள் தீர்வைக் காணமுடியாமற்போய் விட்டால், நாடாளுமன்றம் அதன் கௌரவத்தை இழந்துவிடும். நாடாளுமன்றத்தின் பலமும் கேள்விக்குறியாகிவிடும்" - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

"பிரதி சபாநாயகர் தரப்புக்கு ஆளுங்கட்சியால் வேட்பாளர் ஒருவரை நிறுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இருவரும் எதிரணியில் இருந்துதான் போட்டியிட்டனர். தனக்கு பெரும்பான்மை உள்ளதா என்பது அரசுக்கு தெரியவில்லை. பிரதி சபாநாயகர் பதவிக்கு போட்டியிட்ட இருவரும் தகுதியானவர்கள். எனவே, வாக்கெடுப்பு முடிவை ஏற்று செயற்படுவோம். ராஜபக்சக்களை வெளியேறுமாறுதான் மக்கள் கோருகின்றனர். நாடாளுமன்ற நடவடிக்கைகளை நாம் ஒன்றிணைந்து முன்னெடுப்போம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு இந்தவாரமும் தீர்வைத் தேடமுடியாமல் போனது. அடுத்தத் கூட்டத்தொடருக்கு முன்னர் தீர்வைத் தேடவேண்டும். இல்லையேல் நாடாளுமன்றம் கௌரவத்தை இழந்துவிடும். அதிகாரமும் இல்லாமல் போய்விடும். எனவே, கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, முடிவை எடுக்கவேண்டும்" - என்றார். (ம-44)

# தேர்தல்கள் ஆணைக்குழுவை தலையிடுமாறு கோரிக்கை!

## 'கோத்தா கோ கம' பிரதிநிதிகள் விடுத்தனர்

கொழும்பு, மே 6

'கோத்தா கோ கம' போராட்டக்களத்தில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவை சந்தித்து, நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையில் தலையிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நீண்ட நேரம் நடைபெற்றுள்ளது. தற்போதைய நெருக்கடி நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு விலகி நிற்பது கவலை தருவதாக போராட்டக்களத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். எனவே உடனடியாக இதில் தலையீடு செய்யவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை போராட்டக்காரர்கள் கோரியுள்ளனர். (ம)

நாளை 07.05.2022 சனிக்கிழமை சித்திரை 24

சுபநேரம் : 02.55 - 04.25

ராகுகாலம்: 08.55 - 10.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தற்போது டீசலுக்குத் தட்டுப்பாடு!

கொழும்பு, மே 6

**இலங்கையில் தற்போது டீசல் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அமைச்சர், நாட்டுக்கு நாளொன்றுக்கு 4 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் தேவைப்படுகின்றது. ஆனால் தற்போது ஒரு நாளைக்கு ஆயிரம் முதல் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலே சந்தைக்கு விடக்கூடிய வகையில் இருக்கின்றது என்று மேலும் தெரிவித்தார். (ம)



## இந்தியாவிலிருந்து வந்தது 40,000 மெ.தொன் பெற்றோல்

கொழும்பு,மே 6

இந்தியாவில் இருந்து 40 ஆயிரம் மெற்றின் தொன் பெற்றோல் ஏற்றிய கப்பல் கொழும்பு துறைமுகத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்தது. இதன்மூலம் இலங்கைக்கு சுமார் 4 லட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் பல்வேறு வகையான எரிபொருளை இந்தியா வழங்கியுள்ளது. எதிர்காலத்தில் அதிக எரிபொருள் இருப்புக்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## பகலில் யாசகர் வேடம் இரவில் கொள்ளையர்கள்

கொழும்பு,மே 6

தனியாக வசிக்கும் வயோதிபர்களின் வீடுகளை இலக்கு வைத்து, தொடர்ச்சியாக பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டு வந்தனர் என்று அறியப்பட்ட சந்தேகநபர்களை பாணந்துறை தெற்குப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பாணந்துறைப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

பகலில் யாசகர்கள் வேடத்தில் வீடுகளை நோட்டமிடும் கொள்ளையர்கள், இரவில் முகமூடி அணிந்து சென்று, கூரிய ஆயுதங்களைக் கொண்டு கதவுகளை உடைத்து, வீடுகளில் கொள்ளையிட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஹெரோய்ன் போதைப் பொருள், சுமார் 2 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கநகைகள், இலத்திரனியல் பொருள்கள் மற்றும் கொள்ளைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (க-இ)



## குடிவரவுத் திணைக்களத்தின் வவுனியா அலுவலகமும் பூட்டு

### மக்கள் வரிசையில் காத்திருப்பு

வவுனியா,மே 6

கணினிக் கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளதால், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வவுனியா அலுவலகம் நேற்றுப் பூட்டப்பட்டிருந்தது.

எனினும் கடவுச்சீட்டைப் பெறச் சென்றோர் அங்கு நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் செயற்பாடு நேற்றுமுன்தினம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு பின்னர் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது. எனினும் கணினிக் கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளது என நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டது. இதுதொடர்பில் அலுவலக வாசலில் அறிவுறுத்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதும், மக்கள் வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது. (க-110)

## கணினியில் மீண்டும் கோளாறு கடவுச்சீட்டுப் பணிகள் நிறுத்தம்

கொழும்பு,மே 6

கணினிக் கட்டமைப்பில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளதால், கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் செயற்பாடு நேற்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, அத்தியாவசியமில்லாத சேவைகள் கடந்த இரண்டு நாள்களாக முடக்கப்பட்டுள்ளன. ஒருநாள் சேவைகளிலும் பாதிப்பு ஏற்பட்டது. நேற்று முன்தினம் கணினிக் கட்டமைப்புத் திருத்தம் செய்யப்பட்டதால், சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என்று திணைக்களம் அறிவித்திருந்தது. எனினும் நேற்று மீண்டும் சேவைகள் முடங்கியுள்ளன. (க-இ)

## குடிவரவுத் திணைக்களத்தை முற்றுகையிட்டு போராட்டம்

கொழும்பு,மே 6

கொழும்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள சென்றவர்கள், பத்தரமுல்லை பிரதான வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடவுச்சீட்டு விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பொரளை - கொட்டாவ, பொரளை - கடுவலை வீதிகளில் சுமார் ஒரு மணித்தியாலம் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. (க-இ)

## இராஜாங்க அமைச்சொன்றும் நிதி அமைச்சர் அலி சப்ரிக்கு

கொழும்பு, மே 6

நிதி மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சராகவே அமைச்சர் அலி சப்ரி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், அவர் குறித்த இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## எனது பரிந்துரைப்படியே இந்தியாவால் உதவிகள்

### நாடாளுமன்றத்தில் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, மே 6

இலங்கைக்கு உதவுவதற்கு முன் இந்திய அரசாங்கம் எனது பரிந்துரையைக் கேட்டது. இலங்கைக்கு உங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்கவேண்டும் என்று நான் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்தேன் என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு உதவ வேண்டுமா வேண்டாமா என்று இந்திய அரசு என்னிடம் கேட்டது. இலங்கைக்கு உதவுவது நல்ல யோசனையா என்று என்னிடம் அவர்கள் கேட்டனர். ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாக, 'இலங்கைக்கு உங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்யுங்கள்' என்று அவர்களிடம் நான் தெரிவித்தேன். அதன் பிறகுதான், இலங்கைக்கு உதவ இந்தியா தீர்மானித்தது. அத்துடன் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை ரத்து செய்யவேண்டாம் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளேன். தேசத்தை ஒழுங்கமைக்க அரசாங்கத்தின் எந்தவொரு வெளிப்படையான மற்றும் உண்மையான முயற்சியையும் நாங்கள் ஆதரிப்போம். அரசாங்கம் நன்கொடையாளர் மாநாட்டை நடத்தவேண்டும் என்று பரிந்துரைக்கிறேன் - என்றார். (ம)

## அலிசப்ரியின் காருடன் மோதுண்டவர் உயிரிழப்பு



கொழும்பு,மே 6

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பயணித்த காருடன் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் காரில் பயணித்துள்ளார். காரைச் செலுத்திய சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது 2022 இற்கான புலமைச்சுடர்-01

முற்றிலும் புதிய பாடத்திட்டத்தைத் தழுவியது

தரம் 05 | தரம் 04 | தரம் 03



வழமை போல் ...

- குறித்த மாதத்திற்குரிய முதன்மைப் பாடங்களுக்கான அலகுப்பரீட்சைகள்
- இரண்டு தொகுதி மாதிரி வினாத்தாள்கள்
- கற்றல் ஊக்கிகள்

பெருமையடைகின்றோம்...

2021 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலை வலிகாமம் கல்வி வலயத்தின் உயர் சித்தி வீதத்தையும். 70 புள்ளிகளுக்கு மேல் நூற்றுக்கு நூறு வீத சித்தியையும் பெற்று வலிகாமம் வலயத்தில் வரலாற்றுச் சாதனை புரிவதற்கு எமது அதிபர் மற்றும் ஆசிரியர் குழாமோடு கூடவே கலங்கரை விளக்கமாக ஒளியூட்டி ,வழிகாட்டிய புலமைச்சுடருக்கு உளம்நிறைந்த பெருநன்றி!



| த.பிரணயன் | க.பிருந்தவி | ர.மிருக்சனா | பு.கஜினா | சு.சஷ்வின் | பா.தனுஜன் | சு.மானுஷா | சி.சிவகரிணி | பி.சோபனா | ஜெ.சர்ஜிகா | பி.ரித்திக் | மோ.திசானி | சு.அபிஸ்னவி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 175 | 174 | 169 | 159 | 158 | 156 | 153 | 153 | 151 | 151 | 150 | 148 | 148 |

- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலய

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள்

(CR 35943) (3/6)

தொடர்புகளுக்கு: 021 492 7411, 077 656 9617


மீண்டும் வேகமெடுக்கும் கொரோனா

# சீனாவின் தலைநகர் பீஜிங்கும் முடக்கம்

பீஜிங், மே 6

சீனாவில் அதிகரித்துவரும் கொரோனாப் பரவல் காரணமாக சீனத் தலைநகர் பீஜிங்கில் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் வர்த்தக நகரான ஷாங்காயில் கடந்த ஒரு மாதகாலமாக தொற்றுப் பரவல் உச்சத்தில் உள்ளது. இதனால் அங்கு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த இரு நாள்களாக தலைநகர் பீஜிங்கில் கொரோனாப் பரவல் வேகமெடுத்து வருகிறது.

இதனால் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக பீஜிங்கில் பஸ் சேவைகள், ரயில் சேவைகள் என்பன நிறுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

# உகண்டாவில் பஸ் விபத்து

## 20 பேர் சாவு



கம்பாலா, மே 6

கிழக்கு ஆபிரிக்க நாடான உகண்டாவில் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போர்ட் போர்டல் நகரிலிருந்து அந்நாட்டின் தலைநகர் கம்பாலாவுக்கு 30க்கும் மேற்பட்ட பயணிகளுடன் பஸ் ஒன்று புறப்பட்டது.

போர்ட் போர்டல் நகருக்கு அருகே திடீரென கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையில் தறிக்கெட்டு தேயிலைத் தோட்டத்துக்குள் பாய்ந்து புரண்டு விபத்துக்குள்ளாகியது.

இந்தக் கோரவிபத்தில் பஸ்ஸில் பயணித்த 20 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர். மேலும் 13 பேர் பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீங்கள் எதிர்பார்த்த லாபம் கிடைக்கப்பெற்று மகிழ்வீர்கள். தொழிலில் இருந்த தேக்கம் விலகும். தன லாபம் அடைவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வார்த்தைகளில் இருக்கும் தெளிவால் நன்மைகளைக் காண்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த செயலில் தடை உண்டாகி பின் நிவர்த்தியாகும். உழைப்பு லாபத்தை ஏற்படுத்தும்.

**மிதுனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறும் நாள். தொழிலை விரிவுபடுத்த புதிய வழிகளைக் கண்டறிவீர்கள். எதிர்பாராத நன்மை உண்டாகும்.

**கடகம்:** குடும்பத்தில் சுபச்செலவு ஏற்படும். அதனால் மகிழ்ச்சி அதிகரிக்கும். திடீர் வரவு உண்டாகும், அதற்கேற்ப செலவும் ஏற்படும். கடின உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத வரவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். கேளிக்கை விஷயங்களில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரியும். நண்பர்களின் உதவியால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**கன்னி:** புதிய பொறுப்புகளை ஏற்று செயற்படுவீர்கள். வார்த்தைகளின் மூலம் சங்கடங்களைச் சந்திப்பீர்கள். குடும்பத்தில் குழப்பம் உண்டாகும் என்பதால் நிதானம் தேவை.

**துலாம்:** புதியவர்களிடம் விழிப்புணர்வு தேவை, சிந்தனை மேலோங்கும். மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். அமைதி தேவை. பெரியவர்களின் ஆலோசனை உங்களுக்கு நன்மை தரும்.

**விருச்சிகம்:** நீங்கள் ஈடுபடும் செயல்களில் தடைகளைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும். அலைச்சல் அதிகரிக்கும். அதற்குரிய பலன் கிடைக்க சற்று தாமதம் ஏற்படும். நண்பர்களை அடையாளம் காண்பீர்கள்.

**தனுசு:** பணியிடத்தில் எடுத்த புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் லாபம் உண்டாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எடுத்த காரியம் யாவும் வெற்றியாகும்.

**மகரம்:** உங்களுடைய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நேற்றுவரை நிறைவேறாமல் இருந்த செயல் இன்று நிறைவேறும். தெய்வ வழிபாடு அமைதி தரும்.

**கும்பம்:** முயற்சிக்கு ஏற்ற லாபம் கிடைப்பதில் தடை, தாமதம் உண்டாகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் ஓரளவுக்கே நன்மை கிடைக்கும். புதிய முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**மீனம்:** உங்களை சங்கடப்படுத்திய பிரச்சினை இன்றோடு விலகும். மனதுக்கினிய சம்பவங்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் முயற்சிகளுக்குண்டான பலனைக் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்துக்கு வடக்கு கடற்றொழிலாளர் இணையம் ஆதரவு

**யாழ்ப்பாணம், மே 6**

**அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு, வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் ஆதரவு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவிக்கையில்,

எமது அமைப்பானது வடபகுதியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுக்கும். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரசாங்கம் திட்டமிட்ட வகையில் காணி சுவீகரிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். எரிபொருள் விலையேற்றம் காரணமாக மீனவர்கள் தற்போது கடும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். எனவே அரசாங்கம் அதற்குத் தகுந்த தீர்வைப் பெற்றுத் தர வேண்டும். அதனால் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளோம் -என்றார். (க-26)



## இந்தியத் துணைத்தூதுவர் யாழ்.பல்கலைக்கு பயணம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக துணைத் தூதுவர் ஜே. ராகேஷ் நட்ராஜ் நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

அங்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் புலமைப்பரிசில்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச-27)

## கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரிப்பு

### நுகர்வோர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 6

யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என நுகர்வோரால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக மீனவர்களின் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கடலுணவுகளின் வருகை மிகக் குறைவாகக் காணப்படுகிறது என மீனவர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதனாலேயே சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நகரை அண்டிய மீன்சந்தைகளில் இறால் கிலோ 1200ரூபாவுக்கும் நண்டு கிலோ 1500 ரூபாவுக்கும், கணவாய் கிலோ 1600 ரூபாவுக்கும் மீன் கிலோ 1000 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)




யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி சுத்திகரிப்புப் பிரிவின் மருத்துவத் தேவைக்கென சிவபூமி அறக்கட்டளை நிலையத்தால் 10 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவர் ஆறு.திருமுருகன் குறித்த நிதியை யாழ்.போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி பவானந்தராஜா மற்றும் மருத்துவ நிபுணர் பிரமா தங்கராஜா ஆகியோரிடம் கையளித்தார். (ச)

## மோ.சைக்கிள் – ஓட்டோ விபத்தில் மூதாட்டி காயம்


சாவகச்சேரி, மே 6

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று முன்னால் சென்ற முச்சக்கரவண்டியை மோதியதில் முச்சக்கரவண்டி வீதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலையில் இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்த 62 வயதுடைய மூதாட்டி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-9)



## கஞ்சா பொதியை கைவிட்டு சந்தேகநபர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், மே 6

காரைநகருக்கு பொன்னாலை ஊடாக கஞ்சாவை கொண்டு சென்ற ஒருவரை அப்பகுதி இளைஞர்கள் மடக்கிப் பிடித்தபோது குறித்த நபர் கஞ்சாவையும் கைத்தொலைபேசியையும் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

அப்பகுதி இளைஞர்கள் குறித்த சந்தேகநபரை பிடித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதற்காக கொண்டு சென்றவேளையே அவர் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரிடம் கஞ்சாவும் கைத்தொலைபேசியும் ஒப்படைக்கப்பட்டன. சந்தேகநபர் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## மோ.சைக்கிள்–ஹன்ரர் மோதி அலுவலர் காயம்

சாவகச்சேரி, மே 6

மோ.சைக்கிள் - ஹன்ரர் ஆகியன மோதிக்கொண்டதில் அலுவலர் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து நேற்று மட்டுவிலில் இடம்பெற்றது.

சாவகச்சேரியிலுள்ள அலுவலகத்தில் கடமையாற்றும் பெண் அலுவலர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் கடமைக்கு வந்தபோது எதிரே வந்த ஹன்ரருடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்த அலுவலர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ-14-9)

## உயிர்வாழ்வு சான்றிதழ் ஒப்படைக்காத ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் நிறுத்தம்

மன்னார், மே 6

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் ஓய்வூதியம் பெறுவோரால், உயிர்வாழ்வு நற்சான்றிதழ் ஒப்படைக்கப்படாதவிடத்து, அவர்களின் ஓய்வூதியம் நிறுத்தப்படும் என்று மன்னார் பிரதேச செயலர் எம். பிரதீபன் தெரிவித்தார்.

பிரதேச செயலக அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் பத்தாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்து 200 பேர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். எமது பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் கோவைகள் சரி செய்யப்படாமல் இருந்தமையால் ஒரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், மன்னார் ஓய்வூதியர்களின் குறைகள் தீர்ந்துள்ளதாக நம்புகின்றேன். எனினும் ஓய்வூதியர்களின் உயிர்வாழ்வு நற்சான்றிதழ் பிரச்சினை உள்ளது. பலரின் உயிர்வாழ்வு நற்சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்ற போதும், ஒரு சிலரின் நற்சான்றிதழ்கள் இன்னும் எமக்குக் கிடைக்கப் பெறவில்லை. இவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா என்பது தெரியாது. இவர்கள் உயிருடன் இல்லாது ஓய்வூதியம் அனுப்பப்பட்டுக் கொண்டு இருந்தால், அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளாக மாற வேண்டிய நிலை ஏற்படும்.

அதனால் ஓய்வூதியர்களின் உயிர்வாழ்வு நற்சான்றிதழ் எமக்கு கிடைக்கப் பெறாதவர்களின் அறிக்கைகளை, கிராம அலுவலர் ஊடாகக் கேட்டுள்ளோம். அறிக்கைகள் கிடைக்காதவர்களின் ஓய்வூதியம் நிறுத்தப்படும் அபாயமும் ஏற்படலாம். மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் இதுவரை 15 பேரின் உயிர்வாழ்வு நற்சான்றிதழ் இன்னும் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை -என்றார். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைத்திருத்தம் மேற்கொண்ட பின்னரும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இழப்பு

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, மே 6

டிசெம்பர் மாதம் வரை தற்போதைய விலையில் எரிபொருளை வழங்கினால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சிடம் இருந்து 550 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற வேண்டியிருக்கும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலைத் திருத்தத்தின் பின்னரும் நஷ்டத்தையே சந்தித்து வருகின்றது. கடந்த முறை எரிபொருள் விலைத் திருத்தம் செய்யப்பட்டபோது அமெரிக்க டொலர் 330 ரூபாவாக இருந்த நிலையில் தற்போது அது 360 ரூபாவாக உயர்ந்துள்ளது. ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி விலைத்திருத்தம் மேற்கொள்ளப்படும் வரை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நாளாந்தம் ஆயிரத்து 613 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது - என்றார். (ம)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கந்தப்பு மாணிக்கம்**

பத்து ஆண்டுகள் சென்றாலும்
பத்தும் மறந்து போகுதம்மா
உன் திருவுருவம் பார்க்கையிலே
பத்து நிமிடம் நான் அழுதால்
பத்தினியாக பற்றி எரிவாயே
பத்து மாதம் என்னை நீ சுமக்கவில்லை
- ஆனாலும்
பார் போற்ற என்னை வளர்த்தாயே
பத்து ஆண்டு நினைவுகளில்....

மலர்வு 11.09.1919

உதிர்வு 27.04.2012

உங்கள் கரங்களால்
வளர்ந்த பேரன்



## பெண் பராமரிப்பாளர் தேவை

**ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் ஐந்து வருடங்களுக்கு மேலாக இயங்கிவருகின்ற வல்வை**

# முதியோர் இல்லத்திற்கு

**பெண் பராமரிப்பாளர் தேவை.**

**உணவு, தங்குமிட வசதி இலவசம்.**

தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

**எமது இல்லத்தில் புதிதாக ஆண்கள், பெண்கள் இணைய விரும்புவோர் இணைந்துகொள்ளலாம்.**

**கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும்.**

தொடர்புகளுக்கு: **077 810 6857**
**077 154 2067**
**021 226 5551**

(mn.18244)(2.6)


## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல் - 2022

### நெளுக்குளம் கோழியிறைச்சிக்கடை, மீன் கடை / சாளம்பைக்குளம் கடை, ஓமந்தை கடைத்தொகுதி, கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை நடாத்துதல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த நெளுக்குளம் மீன் கடை, கோழி இறைச்சிக் கடை / சாளம்பைக்குளம் கடை, ஓமந்தை கடைத்தொகுதி, கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை போன்றவற்றை 2022ஆம் ஆண்டு ஆனி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2022.05.20ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2022.05.20ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி **"பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2022.05.20ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

விண்ணப்பதாரர் இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடை விபரம் | 2022ம் ஆண்டு அரை வருடத்திற்கான குறைந்த கேள்வித்தொகை | மாதவாடகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| நெளுக்குளம் கோழிறைச்சிக் கடை | 271500.00 | | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மீன்கடை | 400000.00 | | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் கடை | | | 36,000.00 | 1,000.00 |
| ஓமந்தை கடைத்தொகுதி | | 25,000.00 | 730.77 | 1,000.00 |
| கோமரசங்களம் மாட்டிறைச்சிக்கடை | 107179.44 | 25,000.00 | | 1,000.00 |

**திரு.தர்மலிங்கம் யோகராஜா,**
**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**
**04.05.2022**

(2.6)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.04.2022 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்


**அமரர் அப்புத்துரை நடராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (07.05.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.352/6, இருபாலை வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்
077 578 9930


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்தரமுல்லை - பொல்துவ சந்திக்கு அருகில் நாடாளுமன்றம் செல்லும் வீதியில் ஹொரு கோ கிராமம் நேற்றிரவு உருவாக்கப்பட்டுள்ளது. பொலிஸார் அமைத்த தடுப்பு கம்பங்கள் அனைத்தும் பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டத்தால் தகர்க்கப்பட்டது. அங்கு அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக் களம் உருவாக்கப் பட்டுள்ளது.

# நாடாளுமன்ற அலுவல்கள் குழுவுக்கு இருவர் நியமனம்

கொழும்பு, மே 6

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோரை தெரிவுக்குழு நியமித்துள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றில் அறிவித்தார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 115 இன் ஏற்பாடுகளுக்கமைவாக 2022 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி நாடாளுமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் சபாநாயகர் தெரிவித்தார். (க-இ)

# ஓடம் கவிழ்ந்து சிறுவன் சாவு!

அம்பாறை,மே 6

களப்புப் பகுதியில் ஓடமொன்று கவிழ்ந்ததில், சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான். இந்தச் சம்பவம் பொத்துவில் அறுகம்பையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.நண்பர்கள் நால்வர் நீராடுவதற்காக களப்புப் பகுதிக்கு ஓடத்தில் சென்றுள்ளனர்.

திடீரென ஓடம் கவிழ்ந்தது. நீரில் மூழ்கியவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். ஏனைய மூவரும் காப்பாற்றப்பட்டு பொத்துவில் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் பொத்துவில் களப்பக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளான். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## எரிபொருளுக்கு...

வான்கள், ஜீப் போன்றவற்றுக்கு 8 ஆயிரம் ரூபாவுக்குள்ளும் மட்டுமே எரிபொருள் வழங்கப்படும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

ஆயினும் டீசல் தேவைப்படும் பஸ்கள், லொறிகள் மற்றும் பிற வணிக வாகனங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## மாணவர்களை...

ஏற்பட்டது.

பேரணியாகச் சென்ற மாணவர்கள் பொலிஸாரின் வீதித் தடைகளை அகற்றி முன்னேறினர். அவர்களைத் தடுக்க முடியாத பொலிஸார் ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக கண்ணீர்ப் புகைக்குண்டு மற்றும் நீர்த்தாரைகளைப் பயன்படுத்தினர். ஆயினும் மாணவர்கள் அங்கு தொடர்ந்து அமர்ந்திருந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ-எ-இ)

## யாழ்...

போராட்டத்தை வெற்றியடையச் செய்வோம் என்னும் துண்டுபிரசுரம் யாழ். நகர வர்த்தகர்களுக்கு நேற்று விநியோகிக்கப்பட்டது.

தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் பெயரில் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வர்த்தகர்களிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

அதனால் இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டு வர்த்தகர்களும் ஆதரவளிப்பார்கள் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, வவுனியாவில் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கி கடைகள் அடைக்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## "டபிள் கேம்"...

நாடாளுமன்றத்தில் நேற்று பிரதி சபாநாயகர் தேர்வின் பின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதி சபாநாயகர் தேர்வின் மூலம் இரட்டை வேடம் போடுபவர்களின் முகத்திரை கிழிந்துள்ளது. மக்களை ஏமாற்றுவதற்காக சிலர் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடிக்கின்றனர். இந்த விடயமும் மக்களுக்கு தெரியவந்துவிட்டது. [illegible]யின் ஆதரவு ரஞ்[illegible] தெரிந்ததால்தான், எமது முடிவு மாறியது. ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவும் அரச பாதுகாவலராக அரசின் கைச்கூலியாக மாறிவிட்டார். உள்ளே நடப்பது அரசியல் 'கேம்' என்பதை போராட்டக்காரர்கள் உணர்ந்திருப்பார்கள்.

எதிரணிகள் உறுதியாக ஓரணியில் நிற்கின்றன. இந்த ஜனாதிபதிமீது நம்பிக்கை இல்லை. இந்த அரசுமீது நம்பிக்கை இல்லை. இரு தரப்புக்களும் வீடு செல்ல வேண்டும். அதற்காகப் போராடுவோம் - என்றார். (அ-எ-44)


# UNIVERSITY OF JAFFNA
## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING
## Diploma in Professional English

**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from the eligible candidates to follow the above course conducted by Department of English Language Teaching (DELT), Faculty of Arts, University of Jaffna.**

### PROGRAMME OBJECTIVES

This course has been designed to:

- Equip professionals and students with English language proficiency to fulfill their day-to-day professional and higher educational requirements.
- Broaden the language skills with advanced proficiency in English language structure, technical writing, advanced reading skill, business communication and presentation skills to perform confidently in any practical situation that requires a higher degree of fluency, accuracy, efficiency and effectiveness.
- Enhance adequate proficiency level in English language to meet the global and national demands in their respective fields.
- Develop Basic Interpersonal Communicative Skills (BICS) and abilities in English and make them conversant in the language.
- Promote all the basic language skills: reading, listening, writing and speaking.

### DURATION

- The duration of the course is one year (which consists of two semesters).
- Classes will be held at weekends only.

### SELECTION CRITERIA

- A candidate must sit for a written examination to check the ability in basic reading and writing skills.The duration of the examination is one hour.
- The candidates will be called for an interview based on the marks scored in the written examination to assess the basic oral proficiency in English.
- Based on the overall performances, 50 candidates will be selected at a time with a reserve list

### COURSE FEE

| | |
|---|---|
| • Application Form | Rs 500.00 |
| • Registration Fee | Rs 750.00 |
| • Library Deposit (Refundable) | Rs 750.00 |
| • Library Usage | Rs 1000.00 |
| • Course Fee | Rs 40,000.00 |
| Total | Rs43, 000.00 |

### ENTRY REQUIREMENTS

- Applicants must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream in one sitting and a pass in English at G.C.E A/L or a credit pass in G.C.E O/L.

### INSTRUCTIONS

- Application form could be obtained from the Centre for Open and Distance Learning, University of Jaffna during 9.00am to 4.00pm on weekdays.

Or

- Application form can be downloaded from website **(www.codl.jfn.ac.lk)** (However, payment slip for 500/= should be attached to the application)

- Duly filled application should accompany the payment slip for a sum of 500/= payable at any branch of the **People's Bank** to the Bursar **(Acc.No.-890022300001093)**. Keep a photocopy of the slip with you.
- Applications should be sent under registered cover to the **Deputy Registrar, Centre for Open and Distance Learning, University of Jaffna, Thirunelvely** on or before **18th May 2022** indicating **"Diploma in Professional English"** on the left hand corner of the envelope

Registrar,
University of Jaffna
*05.05.2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை நோக்கி சஜித் கேள்விக்கணை!

கொழும்பு, மே 6

நாடாளுமன்றில் நேற்று அரசாங்கத்தை நோக்கி சஜித் நேற்று பல்வேறு கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

வரிக்குறைப்பால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம், பண்டோரா ஊழல் பணம் எப்போது மீட்கப்படும், சீன அரசின் உதவிகளைப் பெறுவதற்கு என்ன நிபந்தனைகள் சீனாவால் முன்வைக்கப்பட்டன உள்ளடங்கலாகவே 18 கேள்விகளை அடுக்கினார் சஜித்.

அவை வருமாறு:-

1.இன்று நாட்டில் வேலையின்மை விகிதம் என்ன?

2.கடந்த 2 ஆண்டுகளில் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் எத்தனை சதவீதம் பேர் வறுமையில் வாடியுள்ளனர்?

3.2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது நாட்டின் மொத்த கடன்சுமை என்ன?

4.2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது எவ்வளவு தொகை அதிகமாகும்?

5.தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் அதிக வருமானம் ஈட்டுவோ ருக்கு வரிச்சலுகை வழங்கியதன்மூலம் அரச வருவாய் எவ்வளவால் குறைந்துள்ளது?

6.மேற்கண்ட வரிச் சலுகையால் நேரடி மற்றும் மறைமுக வரி செலுத்துவோர் தொகை (பெருமானம் சேர் வரி) எவ்வளவால் குறைக்கப்பட்டுள்ளன?

7.2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கடந்த இரண்டு ஆண்டுகளில் அரச கடன்களுக்கான வட்டி விகிதம் என்ன?

8.இத்தகைய அரசாங்க வருவாயுடன் ஒப்பிடும்போது அதிக வட்டி விகிதம் செலுத்தும் வேறு எந்த நாடும் உள்ளதா?

9. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் அதிகாரபூர்வ பயன்பாடு அல்லது உண்மையான வெளிநாட்டுக் கையிருப்பின் அளவு என்ன?

10.சீன அரசாங்கத்தால் பரிவர்த்தனை திட்டத்தின் கீழ் 10 பில்லியன் யுவான் வழங்கும்போது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் என்ன? அந்த நிபந்தனைகளின்கீழ் இந்தச் சலுகையைப் பெறுவதற்கான விசேடமான காரணங்கள் என்ன?

11.இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கிய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனில், மீதமுள்ள 750 மில்லியன் அமெரிக்க டொலரை இரும்பு, உருக்கு இறக்குமதிக்காகப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளது. அது உண்மையா?

12.சமீப காலமாக தொடர் மின்வெட்டு காரணமாக வீடுகள் மற்றும் தொழிற்சாலை களின் மின் நுகர்வு எந்த அளவுக்குக் குறைந்துள்ளது? கடந்த 6 மாதங்களில் மின்வெட்டு காரணமாக பொருளாதாரத்தில் எந்தளவு நட்டம் ஏற்பட்டுள்ளது?

13.சமீப காலத்தில் விலை அதிகரிப்பினால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியுள்ளதா? இல்லையென்றால், நட்டத்தை எதிர் கொள்ளாது நடத்திச் செல்ல இன்னும் எந்தளவில் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டும்?

14.கடந்த ஆறு மாதங்களில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்கு எவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளது?

15.தற்போதைய எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளை முடிவுக்குக்கொண்டு வந்து, எரிவாயு மற்றும் எரிபொருளை மக்களுக்கு வழக்கம் போல் வழங்கக் கூடிய திகதி என்ன?

16.அரச உர நிறுவனங்களால் இவ்வருட சிறுபோகத்துக்காக எவ்வளவு இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது? தற்போது வீழ்ச்சியடைந்துள்ள நெல் விவசாயம் மற்றும் ஏனைய விளைச்சல்களுக்கு அந்த உரத்தை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் விலை எவ்வளவு?

17.பண்டோரா பத்திரம் ஊடாக நம் நாட்டி லிருந்து மோசடியாக திருடப்பட்ட பணம் எப்போது மீட்கப்படும்? இதற்காக அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

18.இலங்கையில் மோசடியான மற்றும் ஊழல் அடிப்படையில் திருடப்பட்ட பணத்தை மீண்டும் நாட்டுக்குள் கொண்டுவருவதற்காக, ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் போதைப்பொருள், குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடு களின் அலுவலகம் மற்றும் உலக வங்கி இணைந்து செயற்படுத்தப்படும் திருடப்பட்ட சொத்துக்களை மீட்கும் திட்டம் ஆகிய சர்வதேச திட்டங்களுக்குச் சென்று தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் எப்போது தயாராகும்? - ஆகிய கேள்விகளையே அரசாங்கத்தை நோக்கி முன்வைத்தார் சஜித். (ம)

## மரண அறிவித்தல்

மண்ணுலகு 14 . 08 . 1945



விண்ணுலகு 04 . 05 . 2022

### நாகமுத்து இரத்தினசிங்கம்

(உரிமையாளர் - குமார் அரைக்கும் ஆலை சித்தங்கேணி - பண்டத்தரிப்பு )

முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இரத்தினசிங்கம் அவர்கள் 04.05.2022 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தையல்முத்து தம்பதிகளின் மருமகனும் யெகதீஸ்வரியின் அன்புக்கணவரும் ஆனந்தி (லண்டன்) நந்தகுமார் (குமார் அரைக்கும் ஆலை - சித்தங்கேணி) ஜீவகுமார் ( நியூ குமார் அரைக்கும் ஆலை-பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆனந்தகுமார் (லண்டன்) சுமதி, மேனகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜித், மிதுஷன், அர்விந், வர்ஷனா, யனோஜன், சாருஜன், ஷாத்மி ஆகியோரின் நேசமுள்ள பேரனும், காலஞ் சென்ற பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனும். சந்திரபாலன், சிவராசா, நடராசா (அமரர்) யெயராசசிங்கம் (கனடா), இராசேஸ்வரி (நீர்கொழும்பு), யோகேஸ்வரி (நல்லூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 06 . 1962



இறப்பு 04 . 05 . 2022

### கதிரவேலு ஆனந்தசோதி

இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு விவேகானந்தா வீதி மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஆனந்தசோதி அவர்கள் நேற்று முன்தினம் (04.05.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அசுபதி தம்பதியரின் அன்பு மகனும். சிற்சபேசன் ராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சண்முகேஸ்வரியின் அன்புக் கணவரும். கமலாசினி (உயர் தொழில்நுட்பக்கல்லூரி மாணவி). சஞ்சீவன் (அமரர்). சிவதாயினி (மாணவி யா/இணுவில் மத்திய கல்லூரி). அருணகிரி (மாணவன் யா/ இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும். வைஸ்ணவன் (கண்ணா-அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்திய சாலை) அவரின் பாசமிகு மாமனாரும். அருட்சோதி (லண்டன்). ஜெகதீஸ்வரி (ரசி). உதயசோதி (சோதி பேக் ஹவுஸ்). புனிதவதி (யசோ-பிரான்ஸ்). அருளேஸ்வரி (சாந்தி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும். குமாரசாமி (ஓய்வுபெற்ற வலி. மேற்கு பி.ச). ரஜனி (லண்டன்). விக்கினேஸ்வரி. சிவானந்தம் (பிரான்ஸ்). தயானந்தன் (முகாமைத்துவ உதவியாளர் வலயக் கல்வி அலுவலகம். யாழ்ப்பாணம்). உதயகுமாரி (லண்டன்). உதயகுமாரன் (பிரான்ஸ்). ஆறுமுகதாஸ் (அண்ணா தொழிலக ஊழியர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும். மகேந்திரன் (லண்டன்). பிரேமிலா (பிரான்ஸ்). சசிந்திரா தேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும். பிரவின். மேவின் (லண்டன்). சேந்தன், கோகிலன், சுதேசன் (லண்டன்). கோவர்த்தனன் (கோபி) ஆகியோரின் சிறிய தகப்பனும். அஜித். அஜிந்தா ஆகியோரின் பெரிய தகப்பனும். தக்ஷா (தனு). பகுரதன். சாரங்கன். சகானா (பிரான்ஸ்). சாருஜா. சாஜித்தியா. ஸ்ரீராம். சாய்ராம். அந்துஷா. ஆகாஷ் (பிரான்ஸ்). பவீனா. சுஜீவன். றஜானா. றேத். கரிஸ்னா. கிறிஸ்னி (கனடா). கோசிலா. துஷியந்தி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும். வர்ஸ்னா. வனஜித். ஆருத்ரன். ஆதித்யன். அபிராமன். இலக்கியா (கனடா). ஆதிரன். மீனாட்சி. சாய்கிறிஸ் (லண்டன்). ஹரி (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2022) வெள்ளிக்கிழமை மாலை 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவேகானந்தா வீதி,
இணுவில் கிழக்கு,
மஞ்சத்தடி.

தகவல்: குடும்பத்தினர்.
077 9214 110, 077 721 4234

(CS 19613) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம்
1979 கார்த்திகை 4.
பல்கலைக்கழக பேராசிரியருக்கு
பண்புள்ள மணமகள் தேவை.

**077 656 5258**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



**தோற்றம்**
**12.03.1947**

**மறைவு**
**08.04.2022**

கடந்த 08.04.2022 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் நடராஜா தியாகநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.05.2022) சனிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தி கிரியைகள் நாளை மறுதினம் (08.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற்று 12.00 மணியளவில் இல.1001 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள திவ்யமஹால் மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து சிறப் பிக்கும் வண்ணம் பணிவுடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்புத் தெய்வம் சுகயீனமுற்று வைத்தியசாலையில் இருந்த போது பல வழிகளிலும் உதவி செய்த வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் சக உத்தியோகத்தர் களுக்கும் இறுதிச்சடங்கின் போது வந்து ஆறுதல் கூறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர் களுக்கும் முன்னாள் உத்தியோகத்தினருக்கும் மலர்வளையம் பனர் போன்றவற்றை வைத் தோருக்கும் உற்றார். உறவினர்களுக்கும் நாம் சிரம் தாழ்த்தி நன்றி கூற கடமைப் பட்டுள்ளோம்.


இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**12/4 கன்னாதிட்டி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 19606) (3/6)

**குடும்பத்தினர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்**
**30 . 05 . 1933**

**மறைவு**
**18 . 04 . 2021**

கடந்த 18.04.2021 சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர்**

### சொக்கலிங்கம் கோபாலசிங்கம் (B.Sc)

(உரிமையாளர் - கரும்புத்தோட்டம், ஸ்கந்தபுரம்)


அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (06.05.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியள வில் **"எமது இல்லத்தில்"** நடைபெற வுள்ளதால் அன்றைய தினம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குமரகோட்டம்,**
**கோண்டாவில்.**

(cs.44503) (2.6)

**குடும்பத்தினர்**
**077 074 0351**

# மரண அறிவித்தல்



## திருமதி புஸ்பவதி வயித்திலிங்கம்

**தோற்றம்**
**25.11.1935**

**மறைவு**
**04.05.2022**

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ். கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி வயித்திலிங்கம் கடந்த (04.05.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னிக்குட்டி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றர்களான தம்பு - செல்லாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திரு.வ.த.வயித்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லம்மா, தட்சணாமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, இராசையா, நல்லையா, நடராசா, சுப்பையா மற்றும் இராசலட்சுமி, தங்கலட்சுமி ஆகி யோரின் மைத்துனியும், ரட்ணகுமார் (குமார் - கனடா), குமுதா, சசிதா (கனடா), சுரேஸ் குமார் (கண்ணன் - அமெரிக்கா), ஜெயதா (சாந்தி), சுகுமார் (ரமேஸ் - லண்டன்) ஆகி யோரின் பாசமிகு தாயாரும், மதிவதனி, ஆத்மநாதன், ரவீந்திரன், செல்வநாயகி, ஸ்ரீஸ்கந்த ராஜா ஆகியோரின் மாமியாரும், பிரியங்கா, கிஷாந்த், ஸ்ரெபெனி, சஜீவன், அக்ஷயன், தமியானோ, ஸ்ரீபன், திவ்யா, லோஜன், டிலக்சன், காயத்திரி, மவுனீசன், சுஜேன், சவானா, சப்றீனா, சோபிகா, கிறிஸ், கபிரியல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விகானா, கமீலா, ஒலிவியா, கெய்டன், கெலீனா, விக்டர் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**ஆத்மநாதன் (மருமகன் - 077 189 9103)**
**34,முத்துறுனி**
**பிள்ளையார் வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

(cs.44033) (2.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**ரட்ணகுமார்**
**சுரேஸ்குமார்** } **மகன்மார்**
**சுகுமார் (ரமேஸ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று...

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் இணை அழைப்பாளர் ரவி குமுதேஷ், அரசாங்க, அரை அரசாங்க நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் ஆடைத் தொழில் துறையைச் சேர்ந்தவர்களும் இந்த ஹர்த்தாலில் பங்கெடுப்பார்கள் என்று தெரிவித்தார்.

அதேவேளை, நேற்று நள்ளிரவு 12 மணி முதல் 24 மணித்தியாலங்களுக்கு ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என ரயில்வே தொழிற்சங்க கூட்டணியின் அழைப்பாளர் எஸ்.பி.விதானகே தெரிவித்தார்.

சகல ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்களும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை நாள் என்றாலும், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் வரவு இருக்காது என்பதால், மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பலாமா? இல்லையா? என்பதைப் பெற்றோர் - பாதுகாவலர் தீர்மானிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல தனியார் நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களை வீட்டிலிருந்து வேலை செய்யப் பணித்துள்ளன. பல நகரங்களில் வர்த்தக நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அநேகமான வர்த்தகர்கள் கடைகளை மூடி போராட்டத்துக்கு ஆதரவளிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுகாதாரப் பணியாளர்களது சங்கமும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்ற போதும், மருத்துவமனைகளில் பணிகள் முன்னெடுக்கப்படும்.

தபால் ஊழியர்கள், கிராம சேவகர்கள், வங்கிச் சேவையாளர்கள் போன்ற துறையினரின் பல தொழிற்சங்கங்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

மருத்துவர்கள் போராட்டத்துக்கு ஆதரவளித்தாலும், அவசர சிகிச்சை நடவடிக்கைகள் இடம்பெறும். நண்பகலில் அடையாள போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நாட்டின் அனைத்துத் துறைகளும் ஸ்தம்பிக்கும் என்றும், அரசாங்கம் மக்களின் கோரிக்கைக்கு செவிமடுக்கும் வரையில் போராட்டங்கள் தொடரும் என்றும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

**(தொடர்புடைய மேலும் சில செய்திகள் உள்ளே).** (அ-எ-இ)

## தனியார்...

நாட்டில் ஏற்பட்டுள்ள டீசல் பற்றாக்குறை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவர் விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்று நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் ஆதரவளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை இன்று நாடாளுமன்றத்துக்கு வெளியே தனியார் பஸ் உரிமையாளர்கள் தங்கள் பஸ்களை நிறுத்தி அமைதியான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

(அ-எ-இ)

## சியம்பலாபிட்டிய...

பிரதி சபாநாயகர் பதவிக்குச் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சார்பில் போட்டியிட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய 148 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் 65 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர். மூன்று வாக்குகள் நிராகரிக்கப்பட்டன என்று சபாநாயகர் அறிவித்தார்.

புதிய பிரதி சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதில் கடந்த சில நாள்களாக சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது. முன்னதாக பிரதி சபாநாயகராகச் செயற்பட்டிருந்த ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தமது பதவியிலிருந்து விலகுகின்றார் எனத் தெரிவித்து, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அறிவித்திருந்தார்.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பதவி விலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று ஜனாதிபதி கடிதம் மூலம் அறிவித்துள்ளார் எனவும், புதிய பிரதி சபாநாயகர் ஒருவரை நியமிப்பதில் தற்போது சிக்கல் இல்லை எனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் அறிவித்திருந்தார்.

இதற்கமைய, நேற்று நாடாளுமன்றில் பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மீண்டும் பிரதி சபாநாயகராகத் தெரிவாகியுள்ளார்.

இதேவேளை- பிரதி சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பில் இரா. சம்பந்தன், மயந்த திஸாநாயக்க, எஸ். வினோநோகராதலிங்கம், உத்திக பிரேமரத்ன, இம்ரான் மஹ்ரூப், சி.வி.விக்னேஸ்வரன், விமல் வீரவன்ஸ, ஜோன் செனவிரத்ன ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. பிரதி சபாநாயகருக்கான தேர்வில் ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் எவரும் போட்டியிடவில்லை.

எனினும், தமது கட்சி, ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை ஆதரிக்கும் என ஆளுங்கட்சியான மொட்டுக் கட்சி நேற்றுக் காலை சபையில் வாக்கெடுப்புக்கு முன்னர் அறிவித்திருந்தது. இதன் மூலம் சுயாதீன எம்.பிக்கள் அரசாங்கத்தை எதிர்ப்பதாக ஆடிய நாடகம் இதன்மூலம் அம்பலாமகியுள்ளது என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

(அ-எ-22)

## எதிரணிகள்...

கராக தெரிவுசெய்யப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரதி சபாநாயகருக்கான தேர்வில் வெற்றிபெற்ற அவர், விசேட உரையொன்றை நிகழ்த்தினார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிரணிகளின் ஏகோபித்த ஆதரவுடன் எனது பெயரைப் பரிந்துரைக்கவே தீர்மானிக்கப்பட்டது. இன்று (நேற்று) காலைவரை அந்த முடிவுதான் இருந்தது. எதிரணியின் கூட்டுப் பலத்தை காண்பிப்பதற்கு நானும் முன்வந்தேன். ஆனால் அதற்கான வாய்ப்பை அந்தக் கட்சிகள் பயன்படுத்தாமல் தவறவிட்டுள்ளன. வீதிகளில் போராடும் மக்களின் போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை தெளிவாகவே குறிப்பிடுகின்றேன்.

எனக்கு ஆதரவாக ஆளுங்கட்சியினர் வாக்களித்திருந்தாலும், சுயாதீனமாகச் செயற்படும் எமது அணியின் முடிவு மாறாது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்கானவொரு அழுத்தமாக எனது நியமனத்தைப் பார்க்கலாம் - என்றார்.

(அ-எ-44)

## குத்தகைக்கு...

குத்தகைக்கு பெற இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் கு. அண்ணாமலை இலங்கைக்கு வந்திருந்தபோது, பாரதிய ஜனதாக் கட்சியின் தேசியத் தலைவர் ஜகத் பிரகாஷ் நட்டாவுடன் இது தொடர்பில் தொலைபேசியில் உரையாடினார் என்று அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்கள், தமிழகத்தில் உள்ள தமிழர்கள் மட்டுமல்லாது, உலகம் முழுதும் உள்ள தமிழர்களிடம் பெரும் செல்வாக்கை பெற வேண்டுமானால், கச்சத்தீவை இந்தியா 99 ஆண்டுகள் குத்தகைக்கு பெற வேண்டும் என இதன்போது அவர் கூறினார் என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் - இலங்கை இடையே கடல் வழி போக்குவரத்தை மீள ஆரம்பிக்க வேண்டும் எனவும் கு. அண்ணாமலை ஆலோசனை கூறியுள்ளார் என்று தமிழக பாரதிய ஜனதாக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

1974 ஆம் ஆண்டு உடன்படிக்கை மூலம் பிரதமர் இந்திரா காந்தி கச்சதீவை இலங்கையிடம் ஒப்படைத்தபோது, பாரதிய ஜனதாக் கட்சியினர் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்ததையும் ஜகத் பிரகாஷ் நட்டாவிடம் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ-எ-இ)

## அரசைக்...

தொடர்பில் பலத்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் வாக்களித்த மக்களை ஏமாற்றும் வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் வைக்கப்பட்டுள்ளது.

நாடு கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், அதற்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று நாட்டு மக்கள் வலியுறுத்திப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்ற நிலையில் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்த 11 கட்சிகள் தங்கள் ஆதரவை விலக்கிக் கொண்டன. அதையடுத்து பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவும் தனது பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

நேற்று நடைபெற்ற புதிய பிரதி சபாநாயகர் தெரிவில் மீண்டும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அரசாங்கத்தில் இருந்து விலகிய பங்காளிக் கட்சிகளின் சார்பாக நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் 11 கட்சிகளின் சார்பாக அவர் நிறுத்தப்பட்டார். ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பெரமுனக் கட்சி தமது சார்பில் வேட்பாளரை நிறுத்தாது, ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு ஆதரவளித்தது.

ஸ்ரீலங்கா பெரமுன சார்பில் வேட்பாளர் நிறுத்தப்பட்டு அவர் தோற்கடிக்கப்பட்டால் அரசாங்கத்தின் இருப்புக்கு ஆபத்து ஏற்படும் என்பதாலேயே, சியம்பலாப்பிட்டியவுக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை பெரமுன எடுத்திருந்தது.

அரசாங்கத்துக்கு ஏற்படவிருந்த நெருக்கடி லாவகமாக இல்லாமலாக்கப்பட்டுள்ளது என்றும், அரசாங்கத்தில் இருந்து விலகியதாகக் கூறிக்கொள்ளும் பங்காளிக் கட்சிகள் அரசாங்கத்துக்கு மறைமுக ஆதரவைக் கொடுத்து வருகின்றன என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்று நாடு முழுவதும் தொடர்ந்து மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று நாடளாவிய ரீதியில் ஹர்த்தாலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில் மக்கள் வாக்குகளால் நாடாளுமன்றம் சென்றவர்கள் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காது பதவிகளுக்காக இரகசிய நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றனர் என்று பொதுமக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

(அ-எ-44)

## உயிருக்கு...

அவர் கைபேசியில் தொடர்ச்சியாக "பப்ஜி" விளையாட்டில் மூழ்கியிருப்பார் என்றும், அவருக்கு வேறு பிரச்சினைகள் எவையும் இல்லை என்றும் அவரது மனைவி விசாரணைகளில் தெரிவித்துள்ளார். தொடர்ச்சியாக கைபேசி விளையாட்டில் மூழ்கியிருந்தமையால் ஏற்பட்ட மனக்குழப்பமே இவரது தவறான முடிவுக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

28 வயதான இளம் குடும்பத் தலைவரே உயிரிழந்துள்ளார். இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

'நேற்றிரவு படம் பார்த்து விட்டு அனைவரும் தூங்கச் சென்றோம். காலையில் எழுந்து பார்த்தபோது கணவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்' என்று மனைவி இறப்பு விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் இறப்புவிசாரணைகளை முன்னெடுத்தார். உடல்கூற்றுப் பரிசோதனையின் பின்னர், சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இரு வாரங்களுக்கு முன்னர் இளவாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். அவரும் கைபேசி விளையாட்டில் தீவிரமாக மூழ்கியிருந்த நிலையில், திடீரென தனது உயிரை மாய்த்துக் கொண்டிருந்தார்.

(அ-எ-26)

## வாக்குச் சீட்டை....

பெற்றது. அந்தப் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டதால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

சபாபீடத்துக்கு முன்பாக வாக்கு பெட்டி வைக்கப்பட்டிருந்தது. எதிர்க்கட்சித் தலைவரின் பெயர் அழைக்கப்பட்டதும், அந்த இடத்துக்கு சஜித் சென்றார். வாக்குச்சீட்டில் தனது வாக்கைப் பதிவு செய்தார். அதைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும், எதிரணி உறுப்பினர்களுக்கும் காண்பித்தார். அதைப் பார்த்த சபாநாயகர் கடுப்பானார்.

"இரகசியத்தன்மை குறித்து கேள்வி எழுப்புகிறீர்கள். பின்னர் இப்படிச் செயற்படலாமா?" என சபாநாயகர் அவரைக் கண்டித்தார்.

(அ-எ-44)

## போக்குவரத்துச்...

கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மக்களால் நடத்தப்படவுள்ள ஹர்த்தாலில் அனைத்து ஊழியர்களும் பங்கேற்க வேண்டும் என்று அகில இலங்கைப் போக்குவரத்து ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் சேபால லியனகே தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் மற்றும் தொழிலாளர் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டுக்களில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது!

கல்வியங்காடு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் பகுதியில் தொடர்ச்சியாகத் திருட்டுக்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் பகுதியில் வீடு ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை கைக் கணினி (ரப்) ஒன்றும் இரு அலைபேசிகளும் திருடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் மேற்படி சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, சந்தேகநபரை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-26)

# வழிப்பறிகளில் ஈடுபட்ட இருவர் நேற்று சிக்கினர்

யாழ்ப்பாணம், மே 6

இளவாலை பொலிஸ் பிரிவில் வீதியில் செல்வோரிடம் தங்க நகைகளை அபகரித்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அச்சுவேலிப் பகுதியில் வீடொன்றில் ஒளிந்திருந்தபோது இருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று இளவாலை பொலிஸார் தெரிவித்தனர். இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் தம்மிக்க பத்மராஜ் தலைமையிலான குழுவினரே இந்தக்கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். சண்டிலிப்பாய்-மாசியப்பிட்டி மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த 22 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். பெரிய விளான், வடலியடைப்பு பகுதிகளில் அண்மையில் நடந்த வழிப்பறிக் கொள்ளைகளுடன் சந்தேக நபர்களுக்கு தொடர்பு உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களால் கொள்ளையிட்ட நகைகள் அடகு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## விமான நிலையப் பணியாளரும் போராட்டம்

கொழும்பு, மே 6

நாட்டில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும்வரையில் குடிவரவு மற்றும் குடியகல்வு தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

விமான நிலையத்தின் விசேட பிரமுகர் முனைய நுழைவாயில்களுக்கான சேவைகளில் இருந்தே அவர்கள் முதற்கட்டமாக விலகவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


## வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்

No 20, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கில்
அமைந்துள்ள புதிய வீடு
வாடகைக்கு கொடுக்கப்படும்.

074 010 1002

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் உத்திராட நட்சத்திரம் செவ்வாய்க்குற்றம் அற்ற மணமகனுக்கு 45 - 51 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சைவபோசனம் விரும்பத்தக்கது.

(CS 145504) (3/6) 076 053 9660

## வேலையாட்கள் தேவை

விசுவமடுவில் இயங்கிவரும் Hotel ஒன்றிற்கு ரொட்டி, கொத்து, ரைஸ் போன்றவற்றில் அனுபவமுள்ள சமையலாளர்கள் தேவை. (மூன்று நேர உணவு மற்றும் தங்குமிடம் இலவசம்)

தொடர்பு: 076 981 9241

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் பிரயா வுரிமை பெற்ற 1976ல் பிறந்த விவாகரத்துப் பெற்ற இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த எஞ்சினியர் மணமகனுக்கு பெற்றோர் உள்நாட்டு/வெளிநாட்டு அழகிய படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகனுக்கு மூன்றாம் இடத்தில் சூரியன், செவ்வாய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புக்கு:- 077 2659 883, 077 9530 606.

## காணி விற்பனைக்கு

இல.314, ஸ்ரான்லி வீதியில் உள்ள
ஆரியகுளச்சந்திக்கு முன்பாக உள்ள
காணி விற்பனைக்குண்டு.

077 817 5926

## பணியாளர்கள் தேவை

பிரபல கட்டடப்பொருள்
வாணிபத்திற்கு கணக்கியல்
சம்பந்தமான கணினி
அறிவுடைய பணியாளர்கள்
தேவை. இருபாலாரும் நேரில்
விண்ணப்பிக்கவும்.

சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 55 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ★ A9 வீதியில் இருந்து 150M தூரம்
- ★ லேடன் கொம்பனி பின்புறம்
- ★ நாவற்குழி சந்தியில் இருந்து 500 M தூரம்
- ★ நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- ★ நல்ல சூழல்
- ★ 20 அடி பாதையுடன்

முன் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 7 லட்சம்
பின் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 5 லட்சம்

தொடர்பு:
077 6585 999
074 043 6673


## ஓரு கணமும் நீங்கா உம் நினைவுகளுடன் ஓடிப்போன ஓராண்டு

### அமரர் Dr.ஆறுமுகம் பார்த்திபன்

திதி: சித்திரை மாத பூர்வபக்க சஷ்டி (06.05.2022)

தாய் மடியில் 14 - 08 - 1966



இறை அடியில் 18 - 04 - 2021

முத்தான எம் நினைவுள்
சொத்தான சொந்தம் நீர்

பண்பாளனாய் பாரினிலே
பறை சாற்றிச் சென்று விட்ட
- பார்த்தீபமே!

உம்மைச் சுட்டெரித்த சுடுகாடும்
எமக்காக வேகாமல் விட்டுவைத்த
நீங்கா உம் நினைவலைகள்...........

சற்றேனும் உலராத - எம்
கண்ணோர நீர்த்துளியுள்

காலந்தான் கரைந்தாலும்
காலனிடம் தோற்றாலும்
பாசமும் நேசமும்
பதமாக நெஞ்சினில்
பக்குவமாய் இழையோட
முத்தான எம் நினைவுள்
சொத்தான சொந்தமாய்
பத்திரமாய் நீரும்
என்றுமே எம்முடன் !!!

உம் ஆத்ம சாந்திக்காய்
அல்லும் பகலும் அனுதினமும்
ஆண்டவனை வேண்டி நிற்கும்
உம் இனிய உறவுகள்.

இல.18, கருவேப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(cs19567) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 11 - 1954



மறைவு 03 - 05 - 2022

### கதிரவேலு நடேசு

(மலேரியா தடைப்பகுதி ஓய்வு பெற்ற முன்னைநாள் ஊழியர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, கைதடி ஆரம்ப பிரதேச வைத்தியசாலை, இணுவில் ஆதார வைத்தியசாலை)

கைதடி மத்தி குமரநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நடேசு கடந்த (03.05.2022) செவ்வாய்க்கிழமை இரவு 8.00 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு குழந்தை தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பியன், கதிராசி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜீவானந்தன் மற்றும் கிரியா (இத்தாலி), ஜெயாநந்தன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் பரமேஸ்வரி, சரஸ்வதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் இலட்சுமி, தெய்வானை, கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சிவகுரு, மயில்வாகனம் (சுவிஸ்), ஆகியோரின் மைத்துனரும் சர்வானந்தனின் (இத்தாலி), அன்பு மாமனாரும், அஸ்வின் (இத்தாலி), அச்சிதா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் விக்கினேஸ்வரி, (ஓய்வுபெற்ற தாதியர்), யோகம், காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகமுத்து ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி மத்தி,
குமரநகர்.

077 445 4110
076 324 0430

தகவல் :
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.